1436

6.] 1927௵ பிப்ரவரி௴ 1௳ [பகுதி 1.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று கற்பகச்சோலையின் அற்புதக் கோலை என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான நான்கு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமன்றி அவற்றின் சஞ்சிகைகள் கிடையா. பழைய சந்தாதாரர்கள் அடுத்த வருஷத்திற்கு பணம் கட்டி விட்டால் அவர்களுக்கு இப்போது தொடங்கப்பட்டிருக்கும் "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவல் கிடைப்பதோடு அதன்பின் அடுத்த வருஷத்தில் தொடங்கப்படும் நாவலும் கிடைக்கும். அடுத்த வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு இந்த மாதத்தில் தொடங்கப்பட்டிருக்கும் "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு „ 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | „ | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | „ | 9 | 10 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்" தபால் பெட்டி, நெ. 167 மதராஸ்.

அச்சுதம் பிள்ளை:—ஆம் ; ஐம்பதினாயிரம் டாலர் அவனுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இதைக்கேட்டதே இலக்ஷ்மணன் தனக்குண்டான சந்தோஷத்தை யடக்கமுடியவில்லை யாதலால் யாவரும் அதைக் கண்டார்கள்.

15 MAR 1927

கோரனர்:—இலக்ஷ்மணன்! இதைக் கேட்டதே நீ சந்தோஷமடைகிறதாகத் தெரிகிறது.

இலக்ஷ்மணன் கோரனரை அலட்சியமாய் நோக்கினானே யன்றிப் பதிலொன்று மளிக்கவில்லை.

கோரனர் அதன்பின் இரத்தினசாமிப் பிள்ளையின் காரியாலயத்தில் வேலை செய்யும் உலகாம்பாள் என்ற மாதை யழைத்து, "இரத்தினசாமிப்பிள்ளை நேற்று முன்னாடியே காரியாலயத்தைவிட்டுச் சென்றது ஏன் என்று உனக்குத் தெரியுமா?" என்றார்.

உலகாம்பாள் தடுமாற்றமுற்று இலக்ஷ்மணனை உற்று நோக்கிவிட்டுப் பிறகு கீழ் நோக்கியபடி நின்றாள்.

கோர:—ஏன் ? உன் விடைக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன் ; சீக்கிரம் பதிலளி.

உலகாம்பாள் கடைசியில் எனக்குத் தெரியாது என்றாள். திருவேங்கடம் சட்டென்றெழுந்து "இவளுக்குத் தெரியும்; எஜமானுக்கு வரும் டெலிபோன் சமாசாரமனைத்தும் வாங்குபவள் இவளே; யாரோ டெலிபோனில் வரும்படி யழைத்ததால்தான் எஜமான் சென்றாரென்பதை இவள் அறிவாள்" என்றான்.

கோரனர் "இது உண்மைதானா?" என்று அவளைக்கேட்டார்.

அவள்:—நான் எப்படிக் கூறலாம். நேற்று டெலிபோனில் பல சங்கதிகள் வந்தன; அவற்றிலொன்றினாற்றான் எஜமான் வெளியிற் சென்றாரென்பது எனக்கெப்படித்

186511



தெரியும்? டெலிபோனில் அவரே சங்கதியைக் கேட்கத் தொடங்கி விட்டால் அது என்ன வென்பது எனக்கெப்படித் தெரியும்?

திருவேங்கடம்:—"உனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டுக் கோரனரை நோக்கி "எஜமான் டெலிபோனில் வந்த ஒரு சமாசாரத்தால்தான் வெளியில் சென்றார்" என்று கூறினான்.

அதன்மேல் கோரனர் அம்மாதை நோக்கி "நீ உண்மையைக் கூறுகிறாயா என்ன?" என்றார்.

உலகாம்பாள்:—காரியாலயத்தின் இரகசியங்களை நான் இம்மாதிரி வெளியிடுவதில்லை.

கோர:—ஓ அப்படியோ! சரி; நீ எம்மாதிரி வெளியிடுகிறாயோ அம்மாதிரி வெளியிடு.

உல:—சரி; யாரோ-யாரோ ஒரு மனிதன் இரத்தினசாமிப் பிள்ளையைச் சுமார் இரண்டு மணிக்குக் கற்பகச் சோலைக்கு வரும்படி கேட்டுக்கொண்டான்.

கோர:—அவன் எதற்காக அவரை யங்கு வரும்படி யழைத்தான்?

உல:—யாரோ அவருக்காக போன் வைத்திருப்பதாய் அவன் கூறினான்.

கோரனர் வியப்போடு:—"என்ன? போன்வைத்திருந்தார்களா? அதன் அர்த்த மென்ன?

உலகாம்பாள்:—அதன் அர்த்தம் என்னமோ எனக்கெப்படித்தெரியும்? ஒருவர் மனதிலிருப்பதை யறிந்துகொள்ளும் சக்தி எனக்கில்லை. அவன் சொன்னதை நான் கூறிவிடுகிறேன். அதற்கு அர்த்தம் இன்னதென்று எனக்குத் தெரியாது. இவ்வளவுவரை கூறக்கூட எனக்குச் சுதந்தரமில்லை. இன்னொருவரைக் கஷ்டத்திற்குள்ளாக்க எனக்குப் பிரியமில்லை.

இவ்வாறு கூறிக்கொண்டே அவள் அழத்தொடங்கினாள்; அவளுக்குண்டாகிய மனவேதனை அவள்பொருட்டேயென்பதும் வேறொருவர்க்கென்பதும் அறியக்கூடவில்லை.

கோரனர் அவளை நோக்கி:—“உலகாம்பாள்! இது மிக்க முக்கியமான விஷயம். தெரிகிறதா? உன்னால் கூடியவரையில் நன்றாகச் சிந்தித்து டெலிபோனில் அவருக்கு அனுப்பப்பட்ட சங்கதி இன்னதென்று கூறு” என்றார்.

உல:—அது எனக்கு நன்றாய் நினைப்பிருக்கிறது. ஏனெனில் அச்சங்கதி யவ்வளவு வேடிக்கையாய்ப் புலப்பட்டது. அவன் “நீ வா! அவன் ஒரு போன்வைத்திருக்கிறான்” என்று சொன்னான். இரத்தினசாமிப் பிள்ளை “நான் இன்று வரமாட்டேன்; எனக்கு வேறு வேலை யிருக்கிறது” என்றார்; அம்மனிதன் “வா வா! நேர்த்தியான மாலைப்போது - உனக்கு முதல்தரமான மனோஞ்சித அத்தர் தருகிறேன்” என்றான்.

கோரனர் வியப்போடு “என்ன? மனோஞ்சித அத்தரா?

உல:—ஆம். எனக்கு அது நன்றாய் நினைவிருக்கிறது-ஏனெனில் எனக்கு அந்த அத்தர்மேல் மிக்க பிரியம்.

கோரனர் அம்புஜத்தை நோக்கி, “அவருக்கு வாசனையில் மிக்க பிரியமோ?” என்று கேட்டார்.

அம்புஜம் ஒருபோதுமில்லை யென்று கூறிவிட்டு அம்மாதை வெறுப்போடு நோக்கினாள். அவள், “அதைப்பற்றி யெனக்கு அக்கரையில்லை யென்று அவர் சொன்னார். அதன் பிறகு அவன், கருங்கடலைப்பற்றி என்னமோ கூறினான்—” என்றாள்.

கோரனர் ஆத்திரத்தோடு, “ஏ மாதே! நீ என்ன கதை கட்டுவதாய்த் தெரிகிறது” என்றார்.

உல:—நான் நடந்ததைக் கூறுகிறேன். கேட்கப் பிரிய மில்லாவிட்டால் நான் பேசாமலிருக்கிறேன்.

கோர:—நீ கூறுவது உண்மையாயின் யாவும் கேட்டே தீரவேண்டும். அப்படியாயின் அம்மனிதன் பயனற்ற வார்த்தைகளை யெல்லாம் கூறினனென்று சொல்கிறாய்?

உல:—அவை பயனற்றவைகளல்ல. இரத்தினசாமிப் பிள்ளை அவ்வாறு நினைக்கவில்லை. அவன் அவ்வாறு கூறியதே அவர் எழுந்து சென்றார்.

கோர:—என்ன? அவனோடு கருங்கடலுக்குச் செல்லவா?

உல:—அதென்னமோ எனக்குத் தெரியாது; கருங்கடல் என்றதைக் கேட்டேன்.

கோர:—கருங்கடல் எங்கிருக்கிறதென்று உனக்குத் தெரியுமா?

உல:—பாடசாலையில் வாசித்தேன்; எங்கிருக்கிறதோ நினைவில்லை. அப்பெயர்மட்டும் கவனத்திலிருக்கிறது.

கோர:—பேசிய அம்மனிதன் அன்னிய நாட்டானோ?

உல:—அல்ல. அப்படித்தெரியவில்லை.

கோர:—நமது நாட்டான்றானோ?

உல:—ஆம்....ஆம்...அப்படித்தான் தெரிகிறது.

கோர:—நீ தடுமாற்றத்தோடு கூறுவதன் அர்த்தமென்ன? ஏன் நிச்சயமாய் இரண்டிலொன்று கூறலாகாது?

உல:—அம்மனிதன் தன் குரலைமாற்றிப் பேசினான்.

கோர:—அது எப்படி யுனக்குத் தெரிந்தது?

உல:—ஒரு சமையம் இயற்கைக்கு மிக்க அதிகமான தொனியோடும்,ஒருசமையம் மிக்க தாழ்வான தொனியோடும் பேசினான். தான் இன்னாரென்று தெரியலாகாது என்னும் எண்ணத்தோடு பேசினானென்று தெரிந்தது.

கோர:—நீ புத்தி நுட்பத்தோடு கவனிப்பவளே. அம்மனி தன் தன் சினேகபாவமாகவே ஏதோ ஆபத்திருக்கிறதென்று தெற்கே செல்லும்படி கூறி யிருப்பான்.

உல:—இருக்கலாம்.

கோர:—இரத்தினசாமிப் பிள்ளை வெளியிற் சென்றதற்கு அச்சமாசாரம் காரணமாயிருந்தாலு மிருக்கும்.

உல:—ஆகா; இருக்கலாம்.

கோர:—"எதற்கும் இவ்விஷயங்களை யெல்லாம் நன்றாக ஆராய்ச்சிசெய்ய வேண்டும். அந்த டெலிபோன் நம்பரை யறிந்து அவன் யாரென்று கண்டுபிடிக்க வேண்டும்" என்றார்.

யாவும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த டிடக்டிவ் கிருஷ்ணன் சட்டென்றெழுந்து, "அது முடியாத காரியம். இம்மாதிரி டெலிபோன் நம்பரைக் கண்டுபிடித்து உளவறியப் பன்முறை முயற்சி செய்திருக்கிறேன். அது ஒரு பெரிய டெலிபோன் சந்திப்பிலிருந்தால் எண்ணைக் கண்டுபிடிக்க லாகும். ஆனால் தனி யிடங்களிலிருந்து பேசியதாயின் கண்டுபிடிக்க முடியாது. ஒருகாலும் முடியாது. அத்தகைய இரகசியவிடங்கள் பலவிருக்கின்றன" என்றான்.

ஜூரர்களில் ஒருவன், "டெலிபோனைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கஷ்டமா? எனக்கு இதுகாறும் அது தெரியாது" என்றான்.

கிருஷ்ணன்:—"ஆம் ஐயா! சில வருடங்களுக்குமுன் ஒரு பெரிய செல்வவந்தர் வீட்டில் ஒரு கொடுங்கொலை நடந்தது; அதில் ஒரு பெரிய டெலிபோன் சந்திப்பிற்குச் சென்று ஒரு டெலிபோன் எண்ணைக்கண்டு பிடிக்க எவ்வளவோ பணம் செலவுசெய்தும் கடைசியில் முடியாமலே போய் விட்டது. ஆதலால் இது ஆகாத காரியம்" என்றான்.

அம்புஜம் அவனைச் சிந்தனையோடு நோக்கினுள். ஏனெனில் கடந்த இரவு "இப்போது நான் பேசிய டெலிபோன் எண் என்ன" வென்று தான் கேட்டதற்கு உடனே எண் தெரிவிக்கப்பட்டது அவள் நினைவிலிருக்கிறது. ஆனல் பேச்சு முடிந்ததும் நேராக உடனே கேட்டிருக்கிருள். பிறகு எல்லம்மாளைப்பற்றி சிந்தித்தாள். "அந்த எண் நம்மிடமிருக்கிறது; அது வந்த இடத்தை யறியலாகும். எதற்கும் இப்போது நடக்கும் விசாரணை முடிகிறவரையில் நாம் பொறுக்கவேண்டும்" என்று எண்ணிக்கொண்டே எல்லம்மாளை நோக்கினுள்.

அச்சமயம் எல்லம்மாள் இலக்ஷ்மணனை யுற்று நோக்கிக்கொண் டிருந்தாள். எல்லம்மாள் பார்வையில் இலக்ஷ்மனிடம் விசேஷ அபிமானம் வைத்திருப்பது போல் அம்புஜத்திற்குப் புலப்பட்டது. அவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் என்று நினைக்க ஒருகாரணமுமில்லை. ஆயினும் அச்சமயம் எல்லம்மாள் பார்வையால் அறிமுகமுடையவர்கள் என்று புலப்பட்டது. எல்லம்மாளுக்கு அங்கு நடக்கும் விஷயங்களில் நாட்டமேயில்லை. அவளுக்குக் கொலையாளியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆவலில்லாதபடியால் தன் சிற்றப்பனிடம் அவளுக்கு உண்மையான அன்பிருந்திராது என்று அம்புஜம் எண்ணினுள். அம்புஜம் மறுபடி கோரனரை நோக்கினுள். அச்சமயம் கோரனர் உலகாம்பாளை நோக்கி, "அந்த மர்மமான சமாசாரம் வந்ததும் இரத்தினசாமிப்பிள்ளை யுடனே யெழுந்து சென்ருரோ? என்று கேட்டார்.

உல:—ஆம் உடனே எழுந்து சென்ருர். மாலை மறுபடி வரமாட்டேனென்று கூறினர்.

கோர:—டெலிபோனில் பேசிய குரலை நீ முன்பு எப்போதேனும் கேட்டதாகக் கவன மிருக்கிறதா?

உல:—"இல்லை" என்றதே, கோரனர் "அப்படியானால் அப்பேச்சினால் அவன் யாராக விருக்கலா மென்று உத்தேசிக்கக் கூட உனக்கு ஒரு விஷயமும் அகப்பட வில்லையோ?" என்று கடிந்து கேட்டார்.

அச்சமயம் அவர் பார்த்த பார்வையாலோ, அல்லது இவ்விஷயத்தில் உண்மையைக் கூறி விடவேண்டுமென்ற எண்ணத்தாலோ அம்மாது சற்று தடுமாற்றமுற்றுக் கடைசியில் "அய்யா பேசியவன் யாராக விருப்பினும் அவன் இரத்னசாமிப்பிள்ளையைச் சிற்றப்பா என்றழைத்தான்" என்று மொழிந்தாள்.

இதைக்கேட்டதே யாவர்க்கும் இலக்ஷ்மணனனே என்று புலப்பட்டது - கோரனர் அவனை உற்று நோக்கினார். அவனும் அவரை நோக்கினான். சற்று நேரம் இருவரும் ஒருவரை யொருவர் நோக்கியதும் வாலிபன் தலை கவிழ்ந்து கொண்டான். அவன் குப்புற விழுந்துவிடுவான் போல் தோன்றியது. ஆயினும் கஷ்டத்தோடு சமாளித்து நின்று சபையைநோக்கி.

"நானே என் சிற்றப்பனைக் கொன்றேனென்று உங்களுக்கெல்லாம் தோன்றுகிறது - நல்லது என்னைச் சிறை செய்யுங்கள். இது உங்கள் கடமை" என்றான்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட அனைவரும் மிக்க வியப்படைந்து விட்டார்கள். இவனுக்குத் தப்பவழி என்ன இருக்கிறது; கொலைக்குக் காரணம், சந்தர்ப்பம், சமயோசிதமான சாட்சி யாவும் இவனுக்கு விரோதமாகவே யிருக்கின்றன. இவன் கொலைசெய்ததை யாரும் பார்க்கா விடினும், இவ்வளவு சாட்சியமும் இவனே கொலைசெய்தான் என்று நிரூபிக்கும்போது எப்படி இதில் சந்தேகிப்பது?

---

## 8-வது அத்தியாயம்.

### கோரனர் விசாரணைத் தொடர்ச்சி:—

இலக்ஷ்மணன் கூறியதைக்கேட்டுக் கோரனர் தடுமாற்றமடைந்தார். அவன் துணிகரமானவனுயினும் அவனுடைய நடக்கை முழுமுரட்டுத்தனமாக அவருக்குப் புலப்படுகிறதன்றி குற்றம் செய்தவன் நடக்கையாய்ப் புலப்படவில்லை. "இலக்ஷ்மணன்! அந்த டெலிபோன் சங்கதி நீயனுப்பியதா?" என்று கேட்டார். அவன் இல்லை என்றான்.

"நீ நேற்று எப்போதேனும் அவரிடம் டெலிபோனில் பேசியதுண்டோ?" என்றதற்கு, இலக்ஷ்மணன் காலையில் பேசினேன்; பிற்பகல் நான் பேசவில்லை" என்றான்.

கோரனர்:—இரத்தினசாமிப்பிள்ளையைச் சிற்றப்பா என்றழைக்கிறவர்கள் உன்னையன்றி வேறு ஆடவர் யாரேனும் இருப்பதாய் உனக்குத் தெரியுமோ?

இலக்ஷ்மணன்:—எனக்குத் தெரிந்து எவனுமில்லை.

கோர:—"பேசியவன் ஆடவன்றான் என்று உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா?" என்று உலகாம்பாளைக் கேட்டார்.

உலகாம்பாள்:—ஆம். ஆடவனே என்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

கோரனர், "இலக்ஷ்மணன்! இப்போது டெலிபோனில் பேசியது நீயென்றுதானே தெரிகிறது?" என்றார்.

இலக்ஷ்:—ஏன்? எப்படி? இவள் தவறாய்க் கூறலாகாதா? இம்மாது அபூர்வமான சங்கதிகளை யெல்லாம் கூறுகிறாள். எனது சிற்றப்பனுக்கு அத்தர் அளிக்க வேண்டுமென்று நான் கனவிலும் நினைக்க மாட்டேன். வேறெவனும் கூடக் கருதமாட்டான். ஆகையால்

இவள் ஏதோ தவறாகவே அர்த்தம் செய்து கொண்டு கூறுகிறாளென்று நினைக்கிறேன்.

அச்சமயம் இந்த விவகாரம் ஒருகாரணத்தால் தடைப் பட்டது. ஏனெனில் திடீலென்று ஒரு ஆள் உள்ளே வந் தான். அவன் வந்து நின்றதும், கோரனர் என்ன சங்கதி யென்று கேட்டார். அதற்கு அம்மனிதன், "ஒரு துப்பறி பவர் போய் இந்த இடமெல்லாம் பகல் முழுதும் சோதனை செய்தார். கடைசியில் ஒரு பென்ஸில்தான் அகப்பட்டது" என்று அதைக் காட்டினான்.

கோரனர், "இதனால் ஒரு உளவு அகப்படுவதாய்ப் புலப்படவில்லை" என்றார்.

துப்பறியும் கிருஷ்ணன் அதை வாங்கிப்பார்த்து, "இத னால் ஒரு வுளவும் வெளியாகாது" என்றான். அதன்மேல் கோரனர், "இது இரத்தினசாமிப்பிள்ளையின் சேபியிலிருந்த தாக விருக்கலாம்" என்று கூறிவிட்டு, அம்புஜத்தினிடம் அப்பென்ஸிலை யளித்து இது உனது சிற்றப்பனுடையதா? பார்" என்றார்.

அவள் அதைப்பார்த்து, "அவரிடம் இது இருந்ததை நான் பார்க்கவில்லை. ஆனால் இதே மாதிரி பென்ஸல்தான், இதைச் செய்தவர்கள் தொழிற்சாலையிலிருக்கும் பென்ஸ லைத்தான் அவர் உபயோகிப்பது" என்றாள்.

அதற்குள் திருவேங்கடம் என்ற சிறுவன் வலிய எழுந்துபோய் அப்பென்ஸிலை வாங்கிப்பார்த்து, "ஆம். இதே தொழிற்சாலைப் பென்ஸிலே, இதே என்னுடைய பென்ஸிலைத்தான் எஜமான் உபயோகிப்பது. ஆயினும் இதைப் பத்திரமாக வைத்துக்கொண்டிரும் - ஜாக்கிரதை யோடு - ஏனெனில் இதில் ஏதேனும் விரற்குறி கண்டு பிடிக்கலாகும் - அஜாக்கிரதையாக இதைக் கையாடினால் அது கலைந்துபோய் விடும்" என்றான்.

துப்பறியும் கிருஷ்டப்பன், "இல்லை யில்லை. இதில் ஒரு உளவுமில்லை. இக்குற்றத்தில் புத்தி சாமார்த்திய மாவது தந்திரமாவது விளங்கவில்லை. இது கல்வி யறி வுடையவன் வேலையல்ல. இதனால்தான் இது சுத்த மூட ரும் முரடருமாகிய யாரோ அறிவிலாக் கள்ளரின் வேலை யென்று கருதவேண்டியதாக விருக்கிறது.

இம்மொழிகளைக் கேட்டதே இலக்ஷ்மணன் கிருஷ்டப் பனை யுற்று நோக்கி, "எவன் இத்தகைய தந்திர சாமர்த்திய மான டெலிபோன் சங்கதியை யனுப்பினனோ அவன் புத்தி சாமர்த்தியமுடையவனென்றே கருதவேண்டும்" என்றான்.

கிருஷ்டப்பன், "ஆ! நீயே யதை யனுப்பினாய். நான் வேண்டுமென்றே இந்த வலையை வீசினேன். நீ இதிற் சிக்கிக்கொண்டாய். நான் கூறியதைக்கேட்டதே நீ ஆலோசனை செய்யாமலே பேசிவிட்டாய். இப்போது நீ கூறியதன் அர்த்தமென்ன? நீ கருங்கடல் என்பதன் கருத்தென்ன? உன் சிற்றப்பனை யங்கு அழைத்துக் கொண்டுபோக உத்தேசித்திருந்தாயோ? அதற்குத்தான் போன் வைக்கப்பட்டதோ?" என்றான்.

இலக்ஷ்மணன் அலக்ஷியமும் ஆங்காரமுமாகிய பார் வையாய், "அய்யா! ஒவ்வொரு கேள்வியாய்க் கேளும். அச்சமாசாரம் அனுப்பிய மனிதன் என் சிற்றப்பனை யந்த வலையிற் சிக்கச்செய்யக் கருதினனென்று உமக்குப் புலப்படு கிறதோ, அதில் சிக்காமல் அவரைக்காப்பாற்ற எண்ணியே யனுப்பினனென்று உமக்குத் தோன்றுகிறதோ? அம் மாது கூறியதில் அவன் உனக்குப் போன் வைத்திருக்கிறான் என்று கூறியதாய்த் தெரிகிறது. அப்படியிருக்கையில் அவன் அவரைக் காப்பாற்றக் கருதியவனென்று தெரிகிற தல்லவா?" என்றான்.

கிருஷ்:—"தம்பி! என்னிடம் உன் சாமர்த்தியத்தைக்

காட்டாதே. என் கண் முன் திரைபோட முயல வேண்டாம். ஆபத்திருப்பது இருப்பது போதும். அதற்காக எச்சரிக்கை செய்வதும் காட்டி, எங்கு ஆபத்துக்கு இடம் கருதப்பட்டிருக்கிறதோ அங்கே வரும் படி கூறப்பட்டிருக்கிறது. அவர் அங்கு சென்றதும், கொல்லப்பட்டதும், மரணத்தறுவாயில் கூறியவார்த்தைகளுமே அதற்குப் போதுமான அத்தாட்சி. இன்னும் என்னவேண்டும்? எனக்கொன்றும் வேண்டாம்" என்ருன்.

கோர:—"கிருஷ்டப்பன்! நீ பேசாமலிரு - அவர் இலட்சுமணன் என்று கூறியவார்த்தை யாரையேனும் குறிக்கலாகும் என்பதை யாவரும் அங்கீகரித்துக் கொண்டோம்" என்ருர்.

கிருஷ்:—அது அப்படியே அர்த்தப்படலாம் - ஆனல் இதில் அப்படியில்லை.

அச்சுதம் பிள்ளை:—இலக்ஷ்மணன் கூறியதுபோல் பெயரினுலேயே எதையும் நிச்சயமாய்க் கூறிவிடலாகாது. இத்தகைய சந்தேகமான ருசுவை வேறு நம்பகமான அத்தாட்சிகளில்லாமல் நம்பலாகாது.

இலட்சுமணன் அச்சுதம் பிள்ளையை யுற்றுநோக்கினுன் - அவரைப்பற்றி அவனுக்குச் சொற்பமே தெரியும் - அவர் இரத்னசாமிப் பிள்ளையின் நண்பர் என்ற வரையில் மட்டுமே அவன் கேள்விப் பட்டிருக்கிருன். அவர் அம்புஜத்தின்மேல் காதல் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியாது - அந்த லாயர் தன் விஷயத்தில் ஒரு பட்சமான வார்த்தை கூறியது அவன் மனதிற்கு மிக்க ஆறுதலையளித்தது - அதனுல் அவர் உருவத்தை நன்ருக மனதில் நோக்கிக் கொண்டான். இலட்சுமணன் ஒருவித அபூர்வமான சுபாவமுடையவன். கடூரமொழிகளும், வசைமொழியும்

உடனே அவனுக்கு மனவேதனையை யுண்டாக்கிவிடும்-ஆனால் அன்பார்ந்த ஒரு மொழி யுடனே அவன் மனதை மிருதுவாக்கிவிடும்.

இன்னொரு விஷயம் இலக்ஷ்மணனுக்குத் தெரியாது. அதாவது பத்திரிகைக்குச் சமாச்சார மனுப்பும் பினுகபாணி அவன் கூட வாசித்தவன். அவன் அங்குவந்ததும் இவனைப் பார்த்து விட்டான். ஆனால் உடனே மனதிற்றோன்றிய ஒரு ஆலோசனைப்படி அங்கிருந்த ஒரு கம்பத்தின் பின் மறைவா யுட்கார்ந்து கொண்டான். அவன் இலக்ஷ்மணன் மேல் சந்தேகங்கொள்ள வில்லை. ஆனால் உண்மையோ பொய்யோ இருக்கிற ருசுக்கள் அவன் மேலேயே பெரும் பாலும் சந்தேகத்தை யுண்டாக்குகின்றனவா யிருக்கின் றன - பிறகு வேண்டுமாயின் சமயோசிதப்படி நமது நண் பனுக்கு எவ்வாறு சகாயம் செய்யக்கூடுமோ செய்து கொள்ளலாம் - முன்னே இது எப்படி முடிகிறதோ பார்ப் போம்" என்பது அவன் கருத்து.

இப்போது புதிதாகக் கொண்டுவரப்பட்ட ருசு ஒரு புட்டியே. கோரனர் அதைக் கண்டதும் "வெறும் பாற் புட்டியே வேறொன்றுமில்லை" என்று வெறுப்போடு கூறி னார். அப்படியிருந்தாலும் ஒரு கொலைக் குற்றத்தில் அது சாக்ஷியாகக் கொண்டுவரப் பட்டபோது யாவரும் வியப் போடேயே அதை நோக்கவேண்டியிருந்தது - சந்தானம் என்பவன் வீட்டைச் சோதித்தபோது இது அகப்பட்டது. அவனை மறுபடி அது எப்படி யகப்பட்டது எங்கு அகப்பட் டது என்று கேட்டபோது அவன் அது சவம் இருந்த விடத் திற்குச் சற்றுதூரத்தில் தரையில் புதையுண்டுகிடந்தது என்றான். ஏதோ ஒன்று அகப்பட்டதென்ற ஆவலால் அதை யெடுத்துக் கொண்டுபோய் மனைவியினிடமளித்து

அதில் நாற்ற மடித்துக்கொண்டிருந்த வஸ்துவைக் கழுவி புட்டியைச் சுத்தம் செய்யும்படி கூறியதாய் இயம்பினன்.

கிருஷ்:—நீ மட்டும் அதை யப்படியே வைத்திருந்தால் நல்லது. அதில் இருந்தவஸ்து என்ன வாசனை யுடையது? புளித்த பால் நாற்றமா?

சந்தானம்:—இல்லையில்லை. அது என்னமோ மருந்து நாற்ற மடித்தது.

கோர:—"என்ன மருந்து?" என்று இரண்டு மூன்று பாஷாணங்களின் பெயர்களைக் கூறினர்.

சந்தா:—எனக்குப் பெயர்கள் தெரியாது. என்னமோ கெட்ட நாற்றமடித்தது. அதோடு அதில் பாகு இருந்தது.

கோர:—அந்தப் பாகையே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார். அப்படியானல் அது வெல்லப்பாகு இருந்த புட்டி, நெடுநாட்களாக அங்கு எறியப்பட்டிருந்ததால் மண்ணில் புதைந்து விட்டது.

சந்தா:—"இல்லை அது தானே புதையுண்டதல்ல; யாரோ புதைத்தார்கள். கொலையாளி என்று நான் நினைக்கிறேன்" என்றான்.

அப்புட்டியைக் கொண்டுவந்த போலீஸ்காரன் கோரனை நோக்கி, "இச்சாட்சியிட மகப்பட்ட வஸ்துக்கள் முக்கியமானவைகளே" என்று கூறிக்கொண்டு ஒரு சிறு கடிதச்சிப்பத்தை யவர் மேஜைமேல் வைத்தான். அதில் இரத்தக்கரை பட்ட கைக்குட்டை யிருந்தது. அது இரத்தத்தில் தோய்க்கப்பட்டதுபோ லிருந்தது. அப்போலீஸ்காரன் "இது இவர்கள் படுக்கைக்குள் சொருகி வைக்கப்பட்டிருந்தது. அதனுற்ருன் இரத்தம் முழுமையும் ஊறியிருக்கிறது" என்ருன்.

கோர:—அப்படித்தான் தோன்றுகிறது. ஆனல் இந்த

அத்தாட்சியால் என்ன ஏற்படுகிறது என்று சந்தானத்தையும் அவன் மனைவியையும் நோக்கினர். அம்மாது சோர்ந்து நாற்காலியில் சாய்ந்து விட்டாள்.

சந்தானமோ கடைசியாய் நம்பியிருந்த ஆதாரத்தையும் கைநழுவ விட்டவன்போல் முகம் வெளுத்துப் பீதியடைந்து விழித்தான். கோரனர் அவனை நோக்கி, "இது உன்னுடையதா?" என்று கேட்டார். அவன் பீதியோடு திடுக்கிட்டவன் போல், "இல்லையில்லை; இறந்தவர் அருகில் இருந்து இதை யெடுத்து வந்தேன்" என்றான்.

கோர.—ஆம்; நீயே யிதைச் செய்தாய். இனிப் பொய்யை விட்டுவிட்டு மரியாதையாய் ஒப்புக்கொள். இவை யுன்னிடமிருந்தகப்பட்டன; இக்குட்டையைப் படுக்கையில் ஒளித்து வைத்தாய்.

சந்தா:—ஆம். ஒளித்துவைத்தேன். ஆனல் இது என்னுடையதல்ல. அங்கு அகப்பட்டது——

கோர:—இந்தக் கட்டுக்கதையைப் படிப்பதை விட்டுவிடு. நீயே அவரைக்கொன்றாய். அந்தக்கத்தியை யென்ன செய்தாய்?

சந்தா:—என்னிடம் கத்தியேயில்லை.

கோர:—"உன்னிடம் அனேகம் கத்திகளிருக்கின்றன" என்று கூறிவிட்டு அவன் மனைவியை நோக்கி, "நீ கூறு சங்கதியை" என்றார்.

அம்மாது, "அய்யா! இக்குட்டையையும் புட்டியையும் என் கணவன் கொண்டுவந்து கொடுத்து இவைகள் கொலை நடந்த விடத்திற்குச் சமீபத்திலிருந்தன வென்று கூறினர். போலீஸார் வந்து பார்ப்பார்களென்று பயந்து குட்டையை மறைத்துவிட்டுப் புட்டியைச் சுத்தம் செய்தேன்" என்றாள்.

கோர:—இவள் முகத்தில் உண்மை தெரிகிறது. இவள்

அவன் கூறியவார்த்தைகளை நம்பிக்கொண்டாள். இன்னமும் உண்மை யென்று நம்புகிருள். அப்படி இவள் நம்பா விட்டாலும் நம்புவதாகவே சாதிப்பாள். இவனே இரத்தினசாமிப் பிள்ளையைக் கொன்றவன். மற்றபடி இவன் கூறியயாவும் இவனே கட்டிக் கொண்ட கதையே. புட்டியைப் பற்றி யிவன் கட்டியகதை விஷம் அதிலிருந்ததாய் எண்ணிக் கொள்வார்களென்று கருதியே. பென்ஸில் இரத்தினசாமிப் பிள்ளை யுடையதே; அந்த அதிசய டெலிபோன் சங்கதி - இவ்வளவே இருப்பது" என்ருர்.

இப்போது யாவும் தெளிவாய் விளங்கிவிட்டன. இரத்தக்கறை பட்ட குட்டை கொலை செய்த கத்தியைத் துடைக்க உபயோகப்பட்டது. நீளமாயிருக்கிற கறைகள் சரியாய்க் காட்டுகின்றன. இன்னும் சில கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றிற்குச் சந்தானம் தடுமாற்றத்தோடு வாய் குழறிக்கொண்டே பதிலளித்தான். உடனே ஜூரர்களும் கோரனரும் ஏகோபித்து அவனே இரத்தினசாமிப் பிள்ளையைக் கொன்றவனென்று தீர்மானித்து விட்டார்கள்.

சந்தானம் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டான். அவன் மனைவி வீட்டிற்கனுப்பப் பட்டாள். அம்புஜம் அம்மாதின் விஷயத்தில் மிக்க பரிதாபமடைந்து அவளருகிற் சென்று தேறுதல் கூறினுள். அம்மாது "அம்மா! என் கணவன் கொலைசெய்யவில்லை - அவர் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்க்கூடியவரல்ல - அவர் ஒருவருக்கும் கெடுதி செய்கிறவரல்ல—" என்று பரிதாபமாய் ஆதாவற்றவளாய்த் துயரத்தோடு கூறினுள்.

அச்சுதம்பிள்ளை வீண்குழப்ப மூண்டாகுமென்று அம்புஜத்தின் காத்தைப்பற்றி, "இப்போது அம்மாதிடம் பேச

வேண்டாம். அதனால் ஒரு பயனுமில்லை" என்று கூறிக் கொண்டே அவளை அப்புறம் அழைத்துச் சென்றார்.

---

## 9-வது அத்தியாயம்.

அச்சுதம் பிள்ளையும் அம்புஜமும் மாளிகையிலுள்ள புத்தகசாலையறையை நோக்கிச் சென்றார்கள். அச்சமயம் சுந்தரம் என்றவேலையாள் அம்புஜத்தினருகில் வந்து "அம்மா! அச்சிறுவன் தங்களிடம் ஒருவார்த்தை பேசவேண்டுமென்கிறான்" என்றான்.

அம்புஜம்:—எந்தச்சிறுவன் ?

சுந்தரம்:—காரியாலயத்திலிருக்கிறானே அவனம்மா. ஒரு விநாடியே பேசவேண்டுமென்கிறான்.

அம்புஜம் உடனே திரும்பி அப்படியே யென்று, பின்னால் சற்று எட்ட மெதுவாய் வந்துகொண் டிருக்கும் திருவேங்கடத்தை நோக்கிச் சென்றாள்.

திருவேங்கடம்:—எனம்மா ? இப்போது யாவற்றிற்கும் தாங்கள் தானே முதலாளி?

அம்பு:—எதற்கு ?

திரு:—அவருடைய காரியாலயம்————

அம்பு:—எதற்காக அதைப்பற்றிக் கேட்கிறாய்?

திரு:—எனக்கு ஒரு நாள், நாளைக்கு, விடுமுறை வேண்டும்.

அம்பு:—"சரி அதுவானால், அப்பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நீ மறுநாள் வேலையில் வந்து சேர்ந்துவிடு. யாரேனும் உன்னைக்கேட்டால் என்னைச் சொல்லு" என்றாள்.

சிறுவன்:—"அம்மா! நான் கட்டாயம் மறுநாள் வந்து விடுவேன். ஒரு முக்கியமான விஷயத்திற்காக நான் வெளியில் செல்லவேண்டும்", என்று கூறிவிட்டுச்

சென்றான். அவன் ஏதோ மிக்க முக்கியமான வேலையின்மேல் செல்பவன்போல் தோன்றினன்.

அம்புஜம் புத்தகசாலையறைக்குச் சென்றபோது அங்கு பினகபாணியும் இலக்ஷ்மணனும் ஒற்றுமையோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கக்கண்டாள். அவர்கள் சந்தித்து ஐந்து வருடங்களானதால் இக்கோர சம்பவத்தைப்பற்றிப் பேசுவதன் முன் தங்கள் பாடசாலை விஷயங்களைப்பற்றிப் பேசத் தொடங்கினர்கள். அம்புஜம் அங்கு செல்லும் போது பினகபாணி, "ஆனல் நான் இப்போது முந்திக் கொள்ளவேண்டும்; நண்பனே! நீ யதை முடித்துக்கொண்ட பின் என்னிடம் வரவேண்டும்; என் வேலையில் எனக்கு அவகாசமில்லை. இந்த விஷயத்தில் இலக்ஷ்மணன் என்ற பெயர் வெளிவந்தது துரதிஷ்டம். ஆயினும் பாதகமில்லை. ஆனல் உன் பெயர் பத்திரிகைகளில் வெளிப்படும்" என்று கூறிவிட்டு அம்புஜத்தை நோக்கி, "நான் போய்வருகிறேன். நான் மறுபடி யுன்னை வந்து காண்பேன்" என்றான்.

அம்புஜம் கனவில் பேசுபவள் போல், "நான் அப்படியே நம்புகிறேன். போய்வா" என்றாள். பிறகு அவள் இலக்ஷ்மணனை நோக்கினள்.

சற்று நேரம் இருவ்ரும் ஒருவரை யொருவர் பார்த்த பின் இலக்ஷ்மணன், "உன் அடையாளமே தெரியவில்லை. ஐந்து வருடங்களுக்குமுன் நாம் விளையாடிக்கொண் டிருந்தபோது இருந்த சிறிய பெண்ணாக நீ தோன்றவில்லை" என்றான்.

அம்பு:—நீ என்னோடு விளையாடியதைவிட என்னை அதிகமாய் இம்சித்தாய். உனக்கப்போது இருபதே வயது. இப்போது ஒரு பெரிய ஆண்பிள்ளையாய் விட்டது போல நடிக்கிறாய். அது கிடக்கட்டும். உன் சமாசாரங்

களைக் கூறு. இப்போது நீ ஏன் இந்திரபுரியிலிருக்கிறாய்? இருந்தும் வீட்டிற்கேன் வரவில்லை? சிற்றப்பா 'இலக்ஷ்மணன்' என்றாரே, ஹோ! அதென்ன அர்த்தம்? என் மனம் இந்நேரம் பெருங் குழப்பத்திலிருந்தது. ஆனால் நீ இதைச் செய்தாயென்று நான் நினைக்கவில்லை - ஆனால் பெரும் பீதியாயிருந்தது - அவரோடு சச்சரவு செய்து கொண்டாயா?

இலக்ஷ்மணன்:—ஆம். அச்சிறுவன் கூறியபடிபடி நடந்தது உண்மை. இப்போது மனவருத்தமான சங்கதிகளை விட்டுவிடுவோம். அவை யொழிந்தன. நாளைவரையில் அதை விட்டு விட்டு நாம் பூரணமாக அறிமுகமாவோம்" என்றான்.

அதன்பின் இலக்ஷ்மணன், தான் அநேக நாட்களாக அவள் மேல் காதல்கொண் டிருப்பதாகக்கூறி, அவளிடம் "நீ என் காதலை யேற்றுக்கொள்வாயா?" என்று கேட்டான். அம்புஜம் இப்போது அதைப்பற்றிப் பேச எனக்குப் பிரியமில்லை யென்று கூறினாள். பிறகு அவன் இனி நான் உனக்குத் துணையாக இருப்பேன் என்று கூறினான்.

அதற்குள் அச்சுதம் பிள்ளை யங்கு வந்தார். அவர் இலக்ஷ்மணனை நோக்கி அவன் அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டதற்காகத் தம் சந்தோஷத்தை வெளியிட்டார். அம்புஜம் இலக்ஷ்மணனைத்தான் வீட்டிலேயே யிருக்கும்படி கூறியதாக இயம்பினாள். அச்சுதம் பிள்ளை இலக்ஷ்மணனை நோக்கி, "நீ யவ்வாறே யொப்புக்கொண்டாயென்று நம்புகிறேன். இச்சமயம் வீட்டில் ஒரு ஆடவன் இருக்கவேண்டும். இச்சங்கதி எங்கும் பகிரங்கமாய் விடும். இக்குழப்பம் அடங்குமட்டும் பத்திரிகைக் காரர்கள் முதலியவர்கள் வந்து அம்புஜத்திற்கு வீண் சிரமங்கொடுப்பார்கள். நீ யிருந்தால் அதைத் தடுக்கலாம்" என்றார்.

இலக்ஷ்:—"ஆகா செய்வேன். ஏன் அம்புஜம்? இனி இங்கேயே வசிக்க உனக்குப் பிரியமா? இது காறும் இங்கு சந்தோஷத்தோ டிருந்தாயா? இச்சம்பவம் நேரும் முன் வரையில்?" என்றான்.

அம்பு:—ஆம்; சிற்றப்பாவோடு சந்தோஷமாகவே இருந் தேன் - இந்த எல்லம்மாள் வருமட்டும். சிற்றப்பா ஒரு வருடத்திற்கு முன் வீட்டிற்கு ஒரு காரியஸ்தி வேண்டுமென்றார். எல்லம்மாள் வந்து தன்னை வைத்துக்கொள்ளும்படி கேட்டாள். அவ்வாறே அமர்ந் தாள். கடைசியில் சிற்றப்பா அவளை மணம் புரிந்து கொள்வதாய் ஏற்பாடு செய்து கொண்டார்.

இலக்ஷ்:—அவள் விஷயத்தில் உனக்குப் பிரியமில்லையோ?

அம்பு:—என்னமோ - ஒவ்வொரு சமையம் அவள் மேல் எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது.

இலக்ஷ்:—யாரையும் நம்பாதே. பின்னால் அவர்கள் குணம் பூரணமாகத் தெரிகிறவரையில் ஒருபோதும் ஒருவ ரையும் நம்பலாகாது. அப்படியாயின் இங்கிருக்க விருப்பமில்லையோ?

அம்பு:—எனக்குள் இன்னும் அதைப்பற்றி ஒரு தீர்மானமும் ஏற்படவில்லை. அதைப்பற்றி இப்போது பேச்சு வேண்டாம்.

இலக்ஷ்மணன் அச்சுதம் பிள்ளையை நோக்கி, "நான் அனுப்பியதாகக் கூறப்பட்ட அந்த அதிசயமான டெலி போன் சமாசாரத்தைப்பற்றி நீர் என்ன கருதுகிறீர்?" என்றான்.

அச்சுதம்பிள்ளை:—நீ அதைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடு வது நலம்.

இலக்ஷ்:—நான் அறிய விரும்புகிறேன். நீர் அதற்கு விடை யளிக்கவே வேண்டும்.

அச்சு:—அப்படியாயின் என் மனசாட்சிக்கு விரோதமின்றி உண்மையாகத் தானே கூறவேண்டுமென்கிறாய்?

இலக்ஷ்:—ஆம் ஆம்.

அச்சு:—அப்படியாயின் அதை நீயே யனுப்பினாய்.

இலக்ஷ்:—யாரோ அவருக்குப் போன் வைத்திருக்கிறார்களென்றும், நான் மனோரஞ்சித அத்தர் கொடுப்பேனென்றும், அவரைக் கருங்கடலுக் கழைத்துப் போவேனென்றும் நான் கூறினேனென்று நீர் நினைக்கிறீர்?

அச்சு:—நீ என் மனதிலிருப்பதைக் கூறும்படி கேட்டதால் நான் கூறினேன். நீ யவ்வார்த்தைகளைக் கூறினாயென்றே கருதுகிறேன். ஆனால் அம்மொழிகள் உங்களுக்குள் பழக்கமான ஏதோ வேடிக்கை வார்த்தைகள் என்று நான் கருதுகிறேன். நீ அவர் மேல் கோபம் கொண்டாயென்று நான் கருதவில்லை. நீ கோரிய பணத்தை யவர் கொடுக்க மறுத்ததால் உனக்கு அவர்மேல் கோபம் வந்திருந்தாலும் அது அப்போதே மறக்கப்பட்டிருக்கும்" என்றார்.

இலக்ஷ்:—நீர் நல்ல ஆலோசனையுடையவர் - ஆனால் இவ் விஷயத்தில் தங்கள் ஆலோசனை தவறிவிட்டது.

அச்சு:—"இருக்கலாம் - ஆனால் இப்போதும் யார் அந்த டெலிபோன் சங்கதியை யனுப்பினார்களோ அவர்கள் கேலியாகவே யப்படிக் கூறினார்கள் என்று நான் கருதுகிறேன்" என்றார்.

அச்சுதம்பிள்ளை யவ்வாறு கூறி வாய்மூடும்போது எல்லம்மாள் துரிதமாக உள்ளே வந்தாள்.

## 10-வது அத்தியாயம்.

எல்லம்மாள் உள்ளே வந்ததும், "ஓ! குடும்ப சம்பாஷணை - என்னை இலக்ஷ்மணம்பிள்ளைக்கு அறிமுகமாக்கி வைக்கவேண்டாமோ?" என்றாள்.

அம்புஜம் உடனே அவ்வாறே செய்தாள். ஆனால் முன்னாடி "ஓ! மெய்யாகவே நீங்கள் இதற்குமுன் சந்திக்கவில்லை. ஓஹோ! அப்படித்தானோ" என்று கூறிவிட்டே யிருவரையும் அறிமுகமாக்கினாள்.

அச்சுதம்பிள்ளை இதுதான் சமயமென்று "இவர்களிருவரும் அறிமுகமாகிப் பேசட்டும்" என்று கூறிக்கொண்டே அம்புஜத்தை அப்புறம் அழைத்துச் சென்று, "இன்று காலை நீ இந்த இலக்ஷ்மணனைக் கண்டது முதல் இவன் மேலேயே யுன் கண்ணும் கருத்தும் இருக்கின்றன. இப்போது இவனை யிங்கேயே யிருக்கும்படி கேட்டுக் கொண்டாய்" என்றார்.

அம்பு:—"ஆனால் நீர் அதை யொப்புக்கொண்டீரே!" என்று வியப்போடு கூறினாள்.

அச்சு:—அச்சமயம் நான் வேறெவ்விதமாய் நடந்துகொள்வது? ஆனால் அது எனக்குப் பிரியமேயில்லை. நீயுடனே நமது கலியாண ஒப்பந்தத்தைப் பகிரங்கப் படுத்தி விட்டாலன்றி அந்த ஏற்பாடு எனக்கு விருப்பமில்லை; அதாவது உனது சிற்றப்பனுடைய சவக்கிரியை நடந்தபின் அதைப் பகிரங்கப்படுத்தி விடவேண்டும்.

அம்பு:—நமது கலியாண ஒப்பந்தத்தையா? உமக்குப் புத்தி மயக்காயிருக்க வேண்டும். நான் உம்மை மணம்புரிவதாய் என் வாயாற் கூறவில்லையே.

அச்சு:—ஆனால் நான் கூறியவற்றிற் கெல்லாம் நீ மறுத்துக் கூறவுமில்லை. இனியும் மறுக்கப்போகிறதில்லை. நான்

18654

கோருவதெல்லாம் நீ இந்த மேற்கு நாட்டு முரட்டுப்பயல் மேல் காதல் கொண்டிருக்கவில்லை யென்று எனக்கு உறுதியாய்க் கூறவேண்டுமென்பதே.

அம்பு:—சந்தேகமின்றி நான் அவன்மேற் காதல் கொண்டிருக்கவில்லை தான்.

அச்சு:—உண்மையில் இல்லைதான்; அதை யுன் வாக்காலேயே கூறவேண்டுமென்பது தான் என் விருப்பம். இப்போது அதை நீயே கூறிவிட்டாயென்பதை மறவாதே. பிறகு உனக்கு எப்போது விருப்பமோ அப்போது நாம் இதைப்பற்றிப் பேசலாம். இப்போது வேண்டாம். நான் அதிகமாய்க் கூறவேண்டியதில்லை. நான் உன்மேல் எத்தகைய காதல் கொண்டிருக்கிறேன் என்பதை நீ யறிவாய்" என்றார்.

அதன் பிறகு அம்புஜம் திரும்பித் துரிதமாய் இலக்ஷ்மணனும் எல்லம்மாளும் இருக்குமறைக்குச் சென்றாள். அவள் வாயிற்படி யருகில் சென்று ஒரு விநாடி நின்றாள். அச்சமயம் எல்லம்மாள்,

"நல்லது; அது அம்மாதிரியேதான் இருக்கட்டும்; இன்று பிற்பகலே அதை யுன்னிடமளிக்கிறேன்; ஆனால் அது என் மனதிற்குச் சரியென்று படுவதாக எனக்கு நிச்சயமாய்ப் புலப்படவில்லை" என்று கூறியது அம்புஜம் செவியில் வீழ்ந்தது. அதற்குள் ஆள்வரும் சத்தம் கேட்டதும் அவள் சாமார்த்தியத்தோடு அச்சம்பாஷணையை மறைத்துத் தடுமாற்றத்தோடு "...அந்த மேற்கு நாட்டில் வாசம் செய்வதல்லவோ....ஆம் ஆம்" என்றாள். அம்புஜம் ஒன்று மறியாதவள் போலவே சாதாரணமாய்ச் சம்பாஷித்தாள்.

மறுநாள் இரத்தினசாமிப் பிள்ளையின் சமாதிக்கிரியை நிறைவேறியது. அதன் பின் யாவரும் வீடுவந்து சேர்ந்

ததே பெரிய கூடத்தில் பிரதான மனிதர்களெல்லாம் உட்கார்ந்தார்கள். மாணசாசனம் வாசிக்கப்பட்டது.

முன் வெளிவந்தபடி ஐம்பதினுயிரம் டாலர் இலக்ஷ்மணனுக்கும், வீடும் அதிலுள்ள சாமான்களும், அவற்ருேடு ஐம்பதினுயிரம் டாலரும் எல்லம்மாளுக்கும் வைக்கப்பட்டிருந்தன. இவை போக மற்ற மீதி ஆஸ்தி முழுமையும் அம்புஜம்மாள் அடையவேண்டிய தென்றிருந்தது. ஆனல் அதில் இரண்டொரு நிபந்தனைகளிருந்தன. அவை யென்ன வெனில்,

"நான் சேகரம் செய்து வைத்திருக்கும் தாவாப் பொருள்களை யென் ஞாபகார்த்தமாக வைத்துக்கொண்டிருந்து ஒரு வருடத்திற்குப் பின் அவற்றை யொரு சரியான பொருட் காட்சிச்சாலைக் களித்துவிடவேண்டும். அவள் வக்கீல் அச்சுதம்பிள்ளையை மணம்புரிந்து கொள்ளவேண்டும். அதுவுமன்றி மேற்கண்ட தாவாப் பொருள்களோடு வருடத்திற்கு இருபத்தைந்து பொருள்கள் சேர்க்கவேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படா விட்டால் அம்புஜமும் ஐம்பதாயிரம் டாலரே யடைவாள். மீதி யாவும் அச்சுதம்பிள்ளையின் காவலில் ஒரு பொருட்காட்சிச் சாலை புதிதாய் ஸ்தாபிக்க வைக்கப்படும்" என்பனவே. இவையன்றி அவருடைய காரியாலயத்தில் வேலை செய்யும் திருவேங்கடம், உலகாம்பாள், வீட்டிலிருக்கும் சுந்தாம் இவர்களுக்குத் தலைக்கு ஆயிரம் டாலரும் வேறு சில தருமங்களுக்குப் பொருள்களும் அளிக்கப்பட்டிருந்தன.

அம்புஜத்தைப்பற்றிய நிபந்தனையைக் கேட்டதே அம்புஜமும் அச்சுதம் பிள்ளையும் தவிர மற்ற அனைவரும் திப்பிரமையடைந்தார்கள். அச்சுதம்பிள்ளை இரத்தினசாமிப் பிள்ளையின் வக்கீலாக விருந்ததோடு பாலிய நண்பருமாயிருந்தார். அதோடு அம்புஜமும் அச்சுதம் பிள்ளையும் நேசமாயிருந்த

விஷயம் இரகசியமல்ல. அனேகருக்கு இவர்கள் ஒருவருக்கொருவர் பொருத்தமாக விருக்கிறார்களென்றே அபிப்பிராயம். அம்புஜத்திற்கு வயது இருபதே. அச்சுதம்பிள்ளைக்கு நாற்பத்தைந்து வயது. கலியாண நிபந்தனை வியப்பாய்த் தோன்றினும் அதில் சம்பந்தப்பட்ட இருவரில் ஒருவர்க்கு அது சம்மதமாயிராதென்று யாரும் கருதவில்லை. அம்புஜத்தின் முகத்தில் ஒருவிதப் பிடிவாதமான பார்வை தோன்றியது. அதிகாரத்திற்குப் பிரியப்படும் குணம் அவளிடமில்லை. ஆதலின் அனேக விஷயங்களில் அவள் பிரியப்படி விட்டுவிட வேண்டுமென்று அச்சுதம் பிள்ளைக்குத் தெரியும். அம்மரண சாசனத்தைத் தானே யெழுதியபடியால் அச்சுதம்பிள்ளைக்கு அந்நிபந்தனைகளெல்லாம் தெரியும். ஆனால் அது அம்புஜத்திற்கு எத்தகைய உணர்ச்சியை யுண்டாக்குகிறதென்பது இப்போதுதான் அவருக்குத் தெரியும். அந்த நிபந்தனை அவளுக்கு வெறுப்பை யுண்டாக்கியதென்பது இப்போது வெளிப்படை.

அவள் உடனே "நான் உம்மை மணம்புரிந்து கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலா எனக்கு ஆஸ்தி வைக்கப்பட்டிருக்கிறது?" என்று கேட்டாள்.

அச்சுதம் பிள்ளை மெதுவாய் "ஆம்" என்றார்.

அம்பு:—"அப்படியாயின் அந்த ஆஸ்தியை நான் மறுத்துவிடுகிறேன். நான் யாரை மணம்புரிய வேண்டுமென்பதைப்பற்றி யின்னொருவர் எனக்குக் கூற நான் சம்மதிக்கமாட்டேன்" என்றாள்.

அச்சு:—"அதைப்பற்றி யிப்போது விவகரிக்கவேண்டிய அவசரமில்லை. அதற்குக் காலம் இருக்கிறது" என்றார்.

அதன்மேல் அம்புஜம் இது காலமும் இடமுமல்ல என்றுணர்ந்து பிறகு ஒன்றும் பேசாமலிருந்து விட்டாள்.

சகோதர சகோதரிகளே! இச்சந்தர்ப்பத்தில் அம்புஜத்தின் குணத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். மேல் நாட்டு மாதருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அளவு கடந்ததும் வரம்பில்லாததுமான சுயாதீனத்தின் பயன் எப்படியிருக்கிறது பாருங்கள். தாய் தந்தையற்ற தன்னைத் தன் சொந்தப் புத்திரிபோல் ஆதரித்துத் தன் ஆஸ்தியின் பெரும் பாகத்தை வைத்த சிற்றப்பனுடைய கட்டளையை யேற்றுக் கொள்ள மறுத்ததால் நன்றி யில்லாதவளாய் விட்டாள். அவள், அக்கட்டளையை மறுத்தாலுங்கூட அவளுக்கு ஐம்பதினாயிரம் டாலர் அவர் வைத்தே யிருக்கிறார். அதோடு அவள் நேசித்திருந்தமனிதனையே மணம்புரியக் கூறி யிருக்கிறானன்றி வேறில்லை. இன்னொருவர் கட்டளைப்படி நாம் நடக்கிறதா என்று அவள் மீறிய சுயாதீன உணர்ச்சியே யவ்வாறு அவள் குணத்தைக் கெடுத்தது.

எல்லம்மாள் அதிருப்தியடைந்தாள். தான் இரத்தின சாமிப்பிள்ளையை மணம்புரிய ஒப்பந்தம் செய்து கொண்டதற்கு முன்பே இச்சாசனம் வரையப்பட்டதென்று அவள் அறிந்தாள். அவர் இன்னும் உயிரோடிருந்து தன்னை மணம்புரிந்து கொண்டால் தனக்கு மிகவும் அதிகமாகப் பொருள் கிடைக்குமென்பது அவள் எண்ணம். உண்மையில் இலக்ஷ்மணன் ஒருவனே திருப்தி யடைந்தவனாய்க் காணப்பட்டான். அவன் சந்தோஷமடைந்தவனாய் அத்தொகை யெப்போது தன் கைக்கு வருமென்று விசாரித்தான்.

இலக்ஷ்மணன் உணர்ச்சியைக்கண்ட அச்சுதம்பிள்ளை இப்படியும் ஆசையிருக்குமோ வென்று வியப்படைந்து அவனருகில் சென்று உட்கார்ந்து அதைப்பற்றிப் பேசுவோமென்று எண்ணி அவனிருக்குமிடத்தை நோக்கிச் செல்லும்போது வழியிலிருந்த திருவேங்கடத்தைத் தட்டிக்

கொடுத்து "சிறுவனே! உனக்கு ஆயிரம் டாலர் வைக்கப் பட்டதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். நீ அப்பணத்தைப்பற்றி ஏற்பாடு செய்யும்போது என்னிடம் ஆலோசனை செய்" என்றார்.

அம்புஜம் துரிதமாய்த் தன் அறைக்குச் சென்று தனியே ஆலோசனை செய்யலானாள்.

"சிறிய தந்தை இப்படிச் செய்வது தெரிந்திருந்தால் நாம் அப்போதே தடுத்துவிட் டிருக்கலாம். அவர் நாம் அச்சுதம்பிள்ளையை மணம்புரிய விரும்புவதாய் எண்ணிக் கொண்டார். ஆயினும் நாம் அவ்வாறு கூறவில்லையே. சே! அப்படிச்செய்ய அவருக்குச் சுதந்தரம் இருக்கிறது - இருக்கட்டும். இந்த இலக்ஷ்மணன் - இவன் எல்லம்மாளை முன்னமே யறிந்தவன் என்பது தெரிகிறது. அப்படி யிருக்க இவர்கள் புதிதாக இப்போதுதான் அறிமுகமானவர்கள் போல் நடக்கவேண்டியதேன்? அன்று அவள் நடு இரவில் யாரிடம் சம்பாஷித்தாள்? ஆ! நாம் அந்த டெலிபோன் எண்ணைக்கொண்டு இவள் யாரிடம் சம்பாஷித்தாள் என்பதை யறியவேண்டும் - ஆம் நாம் எப்படியாவது நமது சிற்றப்பனைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். அதன் மேல் உடனே உடையணிந்து தன் தோழியை நோக்கி, "யாரேனும் என்னைப்பற்றிக் கேட்டால் வெளியில் சற்று உலவி வரச்சென்றதாய்க் கூறு" என்று திட்டம் செய்துவிட்டுச் சென்றாள்.

அம்புஜம் அருகிலிருக்கும் டெலிபோன் காரியாலயத்திற்குச் சென்று தான் குறித்துவைத்திருந்த எண்ணைக் கூப்பிட்டாள். அங்கிருந்து ஒரு ஆடவன் "யார்?" என்று கேட்டான். அம்புஜம் "நீயார்?" என்றாள். அவன், "ஜகநாதன்; என்னசங்கதி? நீ யார்?" என்றான்.

அம்புஜம் தடுமாற்றமடைந்து, சற்று சமாளித்து, "நீர் - நீர் - எல்லம்மாளுடைய நண்பரா?" என்றாள்.

அம்மனிதன்:—"எல்லம்மாள் என்பது யாரென்று எனக்குத் தெரியாது. இப்போது பேசுவது எல்லம்மாளா?" என்றான்.

அம்பு:—"அல்ல; ஆனால் அம்மாது உனக்குத் தெரியுமே. நேற்றிரவு நடு இராத்திரியில் அவள் டெலிபோன் மூலமாய் உன்னிடம் பேசினாளே" என்றாள்.

அம்மனிதன்:—நேற்றிரவு நான் இங்கில்லை; கடந்த இரண்டு நாட்களாய் என் அறையை என் நண்பன் ஒருவனுக்கு—இலக்ஷ்மணன் என்பவனுக்கு விட்டுப்போயிருந்தேன்.

அம்புஜம் திடுக்கிட்டு "யார் யார்?" என்றாள்.

அம்மனிதன், "இலக்ஷ்மணன் - மேற்கு நாட்டிலிருந்து வந்திருக்கிறான்-இப்போது தன் சுற்றத்தாராகிய இரத்தினசாமிப்பிள்ளை என்பவர் வீட்டிற்குச்சென்றிருக்கிறான். என்ன சமாசாரம் - ஏன் இப்படிக் கேட்கிறாய்? ஆ! நான் உன் விவகாரங்களில் வலியத் தலையிடுவது ஒழுங்கல்ல. நீ அந்த இலக்ஷ்மணனிடம் பேசவேண்டுமோ?" என்றான்.

அம்புஜம், "இல்லையில்லை. சம்பாஷணை போதும்; மிக்க வந்தனம்" என்று அதைவிட்டுத் திரும்பினாள்.

ஆனால் அவள் மனதில் இப்போது பெருங்கலக்கமுண்டாகி விட்டது. முன்னமே எல்லம்மாள் விஷயத்தில் அவளுக்குப் பிரியமில்லை. விசாரணையில் இலக்ஷ்மணன் மேல் ஆரம்பத்தில் சந்தேகம் உண்டாயிற்று. பிறகு அது சந்தானத்தின்மேல் வீழ்ந்தது. ஆனால் அவளுக்கு அவன் தன் சிற்றப்பனைக் கொன்றிருப்பான் என்று கருதக்கூடவில்லை.

இப்போது இலக்ஷ்மணனோடேயே எல்லம்மாள் அந்த நடு இரவில் பேசினாள் என்பது தெரிகிறது. அவள் "இப்

போது அதைப்பற்றிப் பேசாமலிரு. ஆம். ஆம். நீ கூறுவதெல்லாம் நான் செய்கிறேன் - ஆனால் இரவு இங்கு வாராதே. அது ஒரு தென்னட்டாள் என்கிறார்கள் என்பது தெரிகிறதா - ஆம் - நாளை அதே யிடத்தில் அதே வேளைக்கு உன்னைச் சந்திக்கிறேன் - வேண்டாம் என்னிடம் டெலிபோனில் பேசவேண்டாம். என்னால் கூடுமானபோது நான் உன்னைக் கூப்பிடுவேன்" என்று கூறினாள். இதன் அர்த்தமென்ன? இவர்கள் பழைய சினேகர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்கள் அதை மறைத்து வைத்துக்கொண் டிருந்தார்கள். இப்போதுதான் புதிதாக முதற்றடவை யறிமுகமானவர்கள்போல் அபிநயித்தார்கள். இந்த விஷயங்களுக்கும் நமது சிற்றப்பா கொலை செய்யப்பட்டதற்கும் சம்பந்தமிருக்கிறதா?" என்று அம்புஜம் சிந்தித்தாள். "இலக்ஷ்மணன் நம்மேல் காதல்கொண் டிருப்பதாய்க் கூறினன். நாம் ஆஸ்தி முழுமைக்கும் சொந்தக்காரியென்று கருதினைக்கும் - இந்த நிபந்தனை யவனுக்குத் தெரியாது. இப்போது தெரிந்தபின் நம்மை இலட்சியம் செய்யமாட்டான் - அவன் எல்லம்மாளோடு சம்பந்தப்பட் டிருக்கிறதாயின் அவன் நினைப்பே நமக்கு வேண்டாம். கடைசியில் அச்சுதம்பிள்ளையின் உதவியைத்தான் நாம் எதிர்பார்க்கலாகும்" என்று எண்ணிக்கொண்டே வீட்டை நோக்கிச் சென்றாள்.

அச்சுதம்பிள்ளை அங்கு தன் வரவிற்கு எதிர்பார்த்திருப்பதைக் கண்டாள். அச்சுதம்பிள்ளை, "அம்புஜம்! இப்போது உனக்குச் சரியான உதவிவேண்டும். நமது கலியாண ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்துவது நலம்" என்றார்.

அம்பு:--என் சிற்றப்பாவின் ஆஸ்திக்கு ஆசைவைத்து அதற்காக நான் உம்மை மணம் புரியமாட்டேன்.

அச்சு:—அது ஒருபக்கமிருக்கட்டும். நான் உன்மேல் காதல் கொண் டிருப்பதும் அது உண்மையானதென்பதும்

உனக்குத் தெரியும், நீயும் என்னை விரும்புகிறு யென்றே நான் நம்பியிருக்கிறேன் - அப்படிக்கில்லா விட்டால் நீ என்னை மணம்புரியும்படி நான் கோர மாட்டேன்.

அம்பு:—நான் அப்படிக் கூறவில்லை. நான் அதைப் பற்றித் தீர்மானம் செய்ய இது சமயமாயில்லை. என் மனதில் எவ்வளவோ கலவரங்களிருக்கின்றன. ஆகை யால் தயவுசெய்து எனக்குக் கொஞ்ச நாள் அவ காசம் கொடுக்கவேண்டும்.

அச்சு:—எவ்வளவு காலம் அவகாசம் வேண்டுமாயினும் அவ் வளவுகாலம் எடுத்துக்கொள். நான் இச்சமயம் கூறுவ தெல்லாம் இந்த விஷயத்தில் என் உதவியைப் பூரண மாய் ஏற்றுக்கொள். எந்தச் சமையத்தில் உனக்கு உதவிசெய்ய வேண்டுமாயினும் நான் ஆயத்தமாயிருக் கிறேன்.

அம்பு:—"ஆ! மிக்க வந்தனம். அவ்வளவே எனக்கு வேண் டியது. தங்கள் உதாரகுணத்திற்குத் தங்களை வாழ்த்து கிறேன்" என்றாள்.

அதன்பின் அச்சுதம்பிள்ளை விடை பெற்றுக்கொண்டு சென்றார். அம்புஜம் ஒரு யோசனையுமின்றி மாளிகைக்குள் உலவிக்கொண்டே சென்றபோது எல்லம்மாளைச் சந்தித் தாள். எல்லம்மாள் முன்னமே மாளிகையின் சொந்தக் காரிக்குரிய அதிகாரத்தைப் பகிரங்கமாய்ச் செய்யத் தொடங்கினாள். அவள் சுந்தரம் என்ற வேலைக்காரனை நோக்கி, "நான் வசந்தகாலத்தில் வீட்டை மூடிவிட்டு வெளியில் செல்ல உத்தேசித்திருக்கிறேன்" என்று மிக்க ஆடம்பரத்தோடு கூறிக்கொண் டிருந்தாள்.

அச்சமயம் அம்புஜத்தைப் பார்த்துவிட்டு, "ஆ! அம் புஜம்! உன் ஏற்பாடென்ன?" என்றாள்.

அம்பு:—"ஓ! நான் இன்னும் ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. அய்யோ! எல்லம்மாள்! நீ எப்படி இவ்வளவு அவசரமாய் நடக்கிறாய்? உன் உள்ளத்தில் துயரமில்லாவிடினும் சிற்றப்பாவின் நினைவிற்காகவாவது மரியாதை காட்டவேண்டாமா?" என்றாள்.

எல்ல:—"இம்மாதிரி என்னிடம் பேசச் சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டாம். நமக்குள் அபிநயம் செய்யவேண்டிய அவசியமில்லை" என்று அகங்காரத்தோடு கூறினாள்.

அம்புஜமும் அவளைப்போலவே அகங்காரத்தோடு "அப்படியாயின் அபிநயமில்லாமலே பேசுவோம். ஜகநாதன் என்பவன் யார்?" என்றாள். எல்லாம்மாள் "அய்யோ அது யாரோ - நான் கேள்விப் பட்டதேயில்லை" என்றாள்.

அவள் கூறிய மாதிரியாலேயே அவள் உண்மையே கூறுகிறாளென்று அம்புஜம் அறிந்து கொண்டாள். பிறகு "அப்படியானால் சரிதான். எனக்கும் அவனைப்பற்றித் தெரியாது. நான் பின்னால் என் ஏற்பாடுகளைப்பற்றி யுன்னிடம் பேசுகிறேன் - இப்போது என்னால் முடியவில்லை. நான் கொஞ்சகாலம் இங்கு தங்கியிருப்பதில் உனக்கு ஆக்ஷேபனையில்லையே?" என்றாள்.

எல்ல:—சந்தேகமின்றி ஒரு ஆக்ஷேபனையுமில்லை; முட்டாள்தனமாய்ப் பேசாதே. உனக்குப் பிரியமாயின் அச்சுதம்பிள்ளையை மணம் புரியுமட்டும் வேண்டுமாயின் இங்கேயேயிரு. ஆனால் நான் வசந்த காலத்திற்கு வெளியில் செல்கிறேன்.

அம்பு:—எப்போது?

எல்ல:—"இரண்டொரு விஷயங்களை யொழுங்கு படுத்திக் கொண்டதும் செல்வேன். வேலைக்காரரை வைத்துக்

கொண்டு "உனக்கு உதவியாக யாரையேனும் கூட வைத்துக்கொண்டு இரு. எனக்குப் பிரியமிருக்கும் வரையில் இதை யுன் சொந்த வீடாகக்கருதிக் கொண்டிரு - என்ன?" என்றாள்.

அம்பு:—மிக்க வந்தனம்; நான் கொஞ்சகாலம் இங்கிருப்பேன்; எது வரையென்று இப்போது கூறமுடியாது.

எல்ல:—நான் இலக்ஷ்மணம் பிள்ளையைக் கொஞ்சகாலம் இங்கிருக்கும்படி கேட்டுக்கொண்டேன். குறைந்தது நான் செல்கிறவரையில்.

அச்சமயம் இலக்ஷ்மணன் உனக்கு எவ்வளவு காலமாய்த் தெரியும் என்று கேட்கக்கருதினாள் - ஆனால் தனக்குள் யாரோ கேட்கவேண்டாம் என்று கூறியதுபோல் புலப்படவும், இரண்டொரு நன்றி மொழிகளைக் கூறிவிட்டுத் தன்னறைக்குச் சென்றாள்.

---

## 11-வது அத்தியாயம்.

பத்திரிகைக்குச் சமாசாரம் எழுதும் பிளுகபாணி என்ற வாலிபன் மறுபடி அம்புஜத்தைக் காணவந்தான். அவனுடைய கூரிய புத்திக்கும் மற்றகுணங்களுக்கும் அம்புஜம் அவன் விஷயத்தில் பிரியங்கொண்டு அவனைக் கண்டுபேச உடன்பட்டாள்.

வாலிபன் அம்புஜத்தை நோக்கி" நீ அச்சுதம்பிள்ளையை மணந்து கொள்வதாக ஒப்பந்தம் நடந்திருக்கிறதென்று பத்திரிகையில் வெளியிடட்டுமா?" என்றான்.

அம்புஜம்:—ஓ! வேண்டாம்.

பிளுகபாணி:—அவ்வளவு ஆஸ்தியை யிழந்தா விடுவாய்?

அம்பு:—அப்படியல்ல - ஒப்பந்தம் உண்மையில் நடந்தபின்

வெளியிடலாம். இத்தகைய விஷயங்களெல்லாம் பத்திரிகைகளில் வெளியிட்டே தீரவேண்டுமோ?

பிஞக:—ஆம், ஆம். அதனுல் என் உத்தேசப்படியே யெழுதாமலிருப்பதற்காகவே உன்னைக் கேட்கிறேன்.

அம்பு:—வேண்டாம் வேண்டாம்; அப்படிக்கெல்லாம் ஒன்றும் வரையவேண்டாம்.

பிஞக:—சரி. அப்படியே செய்கிறேன்; நீ மட்டும் சில உண்மைகளை வெளியிடு. அந்தச் சந்தானம் என்பவன் கொலைசெய்தானென்று நீ கருதுகிருயா?

அம்பு:—ஹோ! என்ன நினைப்பமென்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் ஒரு முதற்றரமான துப்பறிபவனை யமர்த்தி இதைக் கண்டுபிடிக்கப்போகிறேன்.

பிஞக:—இதோ பார். எனக்கு வலியத் தலையிட விருப்பமில்லை. ஆனுல் நானும் துப்பறியப் பழகுகிறவனே. நீ யனுமதி யளித்தால் நான் முயற்சி செய்கிறேன். அல்லது தொழிலாளியையே யமர்த்த வேண்டுமென்று நினைக்கிருயோ?

அம்பு:—தொழிலாளியை யமர்த்தவே விருப்பம். ஆயினும் உனக்குச் சரியான வழியில் வேலை செய்வோம் என்று நம்பகமிருந்தால் நீ செய். உன்னோடு சேர்ந்து வேலை செய்வது எனக்குச் சுலபமாயிருக்கும் - நானே எவ்வளவோ செய்யப்போகிறேன். இப்போதே ஒரு துப்பறிபவனிடம் இதை யொப்பித்துவிடப் போகிறதில்லை. உன் வரையில் நீ முயற்சிசெய். நீ எதையேனும் கண்டுபிடித்தால் நல்லதாயிற்று - இன்றேல் கெடுதியொன்றுமில்லை.

இம்மொழிகளைக் கேட்டதே பிஞகபாணி மிக்க சந்தோஷமடைந்தான். "ஆ! நீ யிவ்வாறு கூறியது மிக்க பெருந்தன்மை; நீ கூறியபடியே நான் வேலை செய்கிறேன்.

இரண்டொரு நாட்களில் நான் முக்கியமான உளவு எதை யேனும் கண்டுபிடிக்காவிட்டால் நீ கெட்டிக்காரனான ஒரு துப்பறிபவனிடமே இதை விட்டு விடு" என்றான்.

ஆனால் பினாகபாணி இரண்டொரு நாட்கள் கழித்து மறுபடி வந்தபோது அவன் மனச்சோர்வடைந்த நிலைமையி லிருந்தான். அவன் அம்புஜத்தை நோக்கி "இது பெருங் குழப்பமானதாக விருக்கிறது. என்னாலொன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. நான் கொலை நடந்த இடத்திற்குச் சென்று பார்த்தேன். அங்கு ஒரு உளவும் அகப்படவில்லை. ஆனால் நான் அங்கு சென்றபோது உன் சிற்றப்பாவுடைய காரியாலயத்தில் வேலைசெய்யும் சிறுவன்—திருவேங்கடம்—அங்கு என்னமோ தேடிக்கொண் டிருப்பதைக் கண்டேன்.

அம்புஜம், "ஆ! அச்சிறுவன்!" என்றாள்.

பினாக:—ஆம். நான் அவனை இங்கென்ன செய்கிறாயென்று கேட்டதற்கு அவன் சும்மா கிளறிப்பார்க்கிறேன் என் றான். அவன் கூறியதைப்பார்த்தால் அவனுக்கொன்று மகப்படவில்லைபோல் தோன்றியது.

அம்புஜம், "அத்தகைய வேலைக்கு அவன் புத்தி சூக்குமமுடையவன்" என்றாள்.

பினாக:—"ஆம்: உடையவனே. இன்று அவனை யிங்கு வரும்படி கேட்டுக்கொண் டிருக்கிறேன். நீயும் நானு மாக அவனிடம் பேசி அவன் ஏதேனும் கண்டுபிடித் தானா வென்பதை யறிவோம். ஒன்றுமில்லையேல் என் வரையில் தீர்ந்த மாதிரிதான். நீ யுன் பிரியப்படி ஒரு முதல்தரமான துப்பறிபவனை யமர்த்திக்கொள்" என்றான்.

அம்பு:—"நான் இதைப்பற்றி முன்னமே அச்சுதம்பிள்ளை யிடம் பேசினேன்; அவர் சம்மதித்தார். ஆனால்

இலக்ஷ்மணம்பிள்ளை துப்பறிபவன் வேண்டாம் என்றார்" என்று கூறியதும் அச்சமயம் உள்ளே வந்திருந்த திருவேங்கடத்தைக் கண்டதும், "ஆ! திருவேங்கடமே வந்துவிட்டான். வா குழந்தாய்!" என்று அன்போடு கூறினள்.

திருவேங்கடம் சந்தோஷத்தால் பிரகாசமடைந்த முகத்தோடு உள்ளே வந்தான். ஆனல் அம்புஜம் தன்னைக் குழந்தாய் என்றழைத்ததும், அவன் கோபமடைந்து, "அம்மா! நான் குழந்தையல்ல - நான் கொஞ்சம் உளவு கண்டுபிடித்திருக்கிறேன்" என்றான்.

அம்புஜம், "சரி, என்ன உளவுகள்?" என்றாள்.

திருவேங்கடம், "ஒரு பொத்தானும் கொஞ்சம் குப்பையும்" என்றான்.

பிளுக:—"வெகு நேர்த்தி - அவற்றைப்பற்றி நீ என்ன கருதுகிறாய்?" என்றான்.

திருவேங்கடம் கோபத்தோடேயே, "இம்மாதிரி நான் நடத்தப்படுவது எனக்குப் பிரியமில்லை. இந்த விஷயத்தில் நான் இனிமேல் வேலை செய்யமாட்டேன்" என்றான்.

பிளுக:—"விசனிக்கிறேன். அப்படியாயின் நாங்கள் வேறு யாரையாவது தான் கூப்பிட்டுக்கொள்ள வேண்டும் - உண்மையில் அவன் எவனுயினும் உன்போல் திரவசுடையவனுக இருக்கமாட்டான் என்பது என்னமோ நிச்சயம் - நீ யிதை யடியோடு விட்டுவிடவா நினைக்கிறாய்? என்?" என்றான்.

திருவேங்கடம்:—ஓ! அப்படியா எண்ணுகிறீர்கள் என்று கோபத்தோடு, அறையை விட்டு, வீட்டைவிட்டே போய் விட்டான்.

அம்பு:—"சரி. நீ அவனுக்கு வெறியுண்டாகும்படிச் செய்து

விட்டாய். இனி யவன் கண்டுபிடித்த உளவுகள் இன்னவென்று தெரிந்துகொள்ள முடியாது" என்ருள்.

பிஞக:—அவன் பொத்தானும் இன்னும் எதுவோ குப்பையும் கண்டுபிடித்ததாய்க் கூறுகிருன். அவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியவை ஒன்றுமிரா.

அச்சமயம் அச்சுதம்பிள்ளை வந்தார். அவர் அடிக்கடி வந்துகொண் டிருந்தார். அவர் அடிக்கடி கலியாண ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்தும்படி அம்புஜத்தைக் கேட்டுக்கொண்டிந்தார். அம்புஜமோ ஒரே பிடிவாதமாய் முன்னே தன் சிற்றப்பனைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ருள். அவர் எப்போதும் அம்புஜத்தின் அபிப்பிராயத்தையறிய மிக்க விருப்பமுடையவரா யிருந்தார். அவர் பகிரங்கமாய் வெளியிடாவிட்டாலும் சந்தானம் கொலை செய்ததாய் அவர் கருதவில்லை என்று மட்டும் அவள் அறிந்துகொண்டாள்.

அம்புஜம் திருவேங்கடம் வந்ததையும் நடந்த சங்கதியையும் கூறியபோது அச்சுதம்பிள்ளை அவன் குப்பையென்பது என்ன? என்ருர்.

அம்புஜம் அவன் குப்பை, அல்லது மண் எதையோ கூறினுன் என்ருள்.

பிஞக:—அச்சிறுவன். ஆபாசமொழிகளை யொரு உளவாய் ஏன் எண்ணிக்கொண் டிருக்கவேண்டும்? ஏன் ஒரு நல்ல துப்பறிபவனை யழைத்து அவனிடம் இந்த வேலையை யளிக்கலாகாது?" என்ருன்.

அச்சுதம்பிள்ளை "ஆம். அதுதான் சரி. தனபாலன் தான் இப்போது பிரசித்தி பெற்றவனுக விருக்கிருன்" என்ருன்.

பிஞக:—ஆ! அவனே சரியானவன். ஆனால் அவனுக்குச் சிலவு அதிகமாகும்.

அம்பு:—அதைப்பற்றி யவசியமேயில்லை. சிற்றப்பாவைக் கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க எவ்வளவு செலவாவதாயினும் ஆகட்டும்” என்றாள்.

அச்சு:—“சரி யப்படியாயின் அவனையே யேற்பாடு செய்வோம்” என்று கூறிவிட்டு டெலிபோனருகிற் சென்றான்.

இதற்கிடையில், சட்டத்திற்குரிய அதிகாரிகள் சுற்று வழியாய்க் குற்றத்தை கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருக்கிறார்கள். துரைத்தன ஜில்லா வக்கீல் அந்த மேற்கு நாட்டிலிருந்து வந்திருக்கும் பயலே இரத்தினசாமிப் பிள்ளையைக் கொன்றவன் என்று எனக்கு ஐயமறத் தெரிகிறது. அப்படியிருந்து அக்குற்றத்தை யவன்மேல் சுமத்த முடியவில்லை” என்று போலீஸ் பிரதம அதிகாரியிடம் கூறினார்.

போலீஸ் அதிகாரி:—“தாங்கள் இலக்ஷ்மணன் என்ற பெயர் இறந்தவரால் கூறப்பட்டதென்பதால் அப்படிக் கருதுகிறீர். இந்நாட்டில் சகோதரன் போன்ற எவனுக்கும் இத்தகைய சந்தர்ப்பங்களில் அவ்வாறு கூறுவதுண்டு. அது ஒரு ருசுவாக ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதல்ல என்பதே என் அபிப்பிராயம்” என்றார்.

வக்கீல்:—நல்லது, எனக்கு அப்படித்தான் தெரிகிறது. இலக்ஷ்மணன் அவரிடமிருந்து கோபத்தோடு பிரிந்து போயிருக்கிறான். பிறகு இறந்தவர் கொல்லப்பட்டிருந்த விடத்திற்கே சென்றிருக்கிறான். அவர் இறக்கும்போது இவனே கொன்றதாகக் கூறியிருக்கிறார். இன்னும் என்ன அத்தாட்சி வேண்டும். அவன்மேல் அக்குற்றத்தை ருசுப்படுத்த இன்னும் சரியான அத்

சாட்சிகள் வேண்டும். அவை அகப்படவில்லை என்பதே என் அபிப்பிராயம்.

போலீஸ் தலைவர்:—அப்படியாயின் உமது ஆளைத் தண்டிக்க முடியாது. அவன் முரட்டுக்குண முடையவனுதலால் பணவிஷயத்தில் சச்சரவு நேர்ந்தபின் அவன் அவரைக் கொன்றிருக்கலாகும் என்று கருதக்கூடியதுதான். ஆனுல் அதற்குச்சரியான ருசுவு வேண்டும்.

வக்:—வேறு சந்தேகிக்கக்கூடியவர்கள் ஒருவருமேயில்லை.

போலீஸ் தலைவர்:—காரணமேயில்லை. அவன் கொன்றிருந்தால் களவாடவே செய்திருக்கவேண்டும். ஏதேனும் களவு போனதாகத் தெரியவில்லை. அதோடு அவன் கொலை செய்திருந்தால், இறந்தவர் கூறிய சங்கதிகளையிங்கு வந்து கூற வந்திருக்கமாட்டான். சந்தானம் நிராபராதி - இலக்ஷ்மணன்தவிர சந்தேகிக்கக் கூடியவர்கள் வேறு ஒருவருமில்லை. நாம் இன்னும் ருசுக்களைச் சேகரிக்கவேண்டும்.

துரைத்தன வக்கீல் அவ்வாறே உளவுகளைக் கண்டு பிடிக்கத் தன் ஆட்களைக் கொலை நடந்தவிடத்திற் கனுப்பினுர். ஆனுல் ஒன்றும் அகப்படவில்லை. அதற்குச் சமீபத்தில் யாராவது சாக்ஷிகளாயினும் கிடைப்பார்களாவென்று தேடினுர்கள். ஒருவருமகப்படவில்லை. அவர் இலக்ஷ்மணன் மேல் மோகூல் வைத்தார். அதனுல் இன்னும் வேறு ருசுக்கள் அகப்படுமென்று கருதினுர். ஒன்றுமே அகப்படவில்லை. கடைசியில் துரைத்தன வக்கீல் இந்த மர்மம் நம்மால் கண்டுபிடிக்க முடியாதென்று மனச் சோர்வடைந்தார்.

அதன்பிறகு துப்பறியும் கிருஷ்டப்பன் ஒரு சங்கதியைக் கண்டுபிடித்ததாய்த் தெரிகிறது. அவன் திடீலென்று வக்கீலின் எதிரில் ஆத்திரத்தோடு வந்து, “அச்சுந்தாம்,

வேலைக்காரன் - அவனே இதைச் செய்தவன். நான் முதலிருந்தே யப்படித்தான் நினைத்தேன்" என்றான்.

வக்கீல் "ஏன் அப்போதே யதைக் கூறவில்லை?" என்றார்.

கிருஷ்டன்:—"அதைப்பற்றி யவசியமில்லை. இப்போது நான் கூறும் சங்கதியைக் கேளுங்கள். இந்தச் சுந்தரம் என்பவன் ஒரு ஜீவாதார நிதியில் ஒரு பெருந் தொகை மதிப்புள்ள பாகத்தை விலைக்கு வாங்க ஏற்பாடு செய்திருக்கிறான். அது இவ்வளவு தொகை யென்று எனக்கு நினைவில்லை. ஆனால் அதை வாங்குவதற்காக அவனுக்கு எண்ணூறு முதல் தொள்ளாயிரம் டாலர் வரையில் வேண்டியிருக்கிறது. இப்போது இரத்ன சாமிப்பிள்ளை வைத்த ஆயிரம் டாலரிலிருந்து அதைக் கட்டினான்"

வக்:—இருந்தாலென்ன?

கிருஷ்:—இதன் விவரமென்ன வெனில் அறுபது வயதாய் விட்டால் அந்த நிதியில் சேர்ப்பதில்லை. இவனுக்கு அடுத்த வாரத்தோடு அறுபது வயது சரியாய் விடுகிறது. இவன் சில வருடங்களாக அதை வாங்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறான். கடைசி சமயத்தில் இரத்னசாமிப் பிள்ளை யொருவரால் கொல்லப்படுகிறார். அவருடைய மரண சாசனத்தில் இவனுக்கு வைக்கப்பட்ட பணத்தைக் கொண்டே அதை வாங்குகிறான். சந்தர்ப்பங்கள் பொருத்தமாக விருப்பதைக் கவனியுங்கள்.

வக்:—இது உண்மையா?

கிருஷ்:—ஆம். அந்த நிதியின் காரியஸ்தன் மூலமாகவே நான் யாவும் கண்டறிந்தேன்.

வக்:—எதற்கும் இதை யாராய்ந்து பார்க்கவேண்டியதே. நீ என்ன செய்தாய்?

கிருஷ்:—"என்ன செய்தேன். இவையாவும் கண்டு பிடித்தேன். இனித்தான் செய்யவேண்டும். முன்னே யவனுடைய அறைகளைச் சோதித்து ஏதேனும் ருசுவகப்படுகிறதாவென்று பார்க்கவேண்டும். இன்றென்று கொலை நடந்ததினம் சுந்தரம் விடுமுறை பெற்றுக்கொண்டிருக்கிறான். அன்று பிற்பகலை யவன் எவ்வாறு செலவழித்தான் என்பதைப்பற்றி திருப்திகரமான தகவல் அளிக்கப்படவில்லை. ஆனால் அதைப்பற்றி யாரும் அவனைச் சரியாகக் கேட்கவில்லை. இப்போது நான் கிளறிப்பார்க்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

சற்று நேரங்கழித்து கிருஷ்டப்பனும் இன்ஸ்பெக்டர் கள்ளழகம் பிள்ளையும் திரைத்தன வக்கீலிடம் வந்ததும், இன்ஸ்பெக்டர் "சுந்தரமே இதைச் செய்தவன் இரத்தக் கறைபட்ட கைக்குட்டை யவனுடையதே. அதேமாதிரி குட்டைகள் அவன் பெட்டியிலிருந்தகப்பட்டன. சந்தேகமின்றி அதேமாதிரியே. சந்தானம் கூறியபடி அதைக் கொலை நடந்த விடத்தில் கண்டெடுத்தான். அவன் விசாரணையில் மிரட்சியடைந்து விட்டான். அச்சமயம் அங்கு போலீஸாரை யவன் கண்டதால் பீதியடைந்து அதை மறைத்துவிட்டான்" என்றான்.

வக்:—அவன் ஏன் அதை யெடுத்துச்சென்றான்?

இன்ஸ்:—"சாதாரணக்களவே. அப்படியே அந்தப் புட்டியையும் எடுத்துச் சென்றான். சுந்தரம் இரத்தின சாமிப்பிள்ளைக்கு இந்த போன் வைத்திருக்கிறான் என்பதை வேறு யாரோ அறிந்து அவருக்கு டெலிபோனில் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்" என்றான்.

வக்:—சரி. சுந்தரத்தை யுடனே சிறைசெய். சந்தானத்தை விடுதலை செய்துவிடுவது நலம்.

இன்ஸ்:—ஆம்.

வக்:—சுந்தரம் இப்போது எங்கிருக்கிறான்.

கிருஷ்:—இப்போது வீட்டிற்கு வந்துவிட் டிருப்பான். ஐந்து மணிக்கு வருவான் என்று கூறினார்கள். நான் விலங்கோடும் இரண்டு ஆட்களோடும் சென்று அவனைச் சிறை செய்கிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

கிருஷ்டப்பன் அவ்வாறே யிருவரை யழைத்துக் கொண்டு போய் இரத்தினசாமிப் பிள்ளையின் மாளிகை யருகில் அவர்களை வெளியில் இருக்கவைத்து "நான் சமிக்கை செய்யும்போது உள்ளே வாருங்கள்" என்று கூறிவிட்டுத் தான் மட்டும் உள்ளே சென்றான். அவன் இந்த விவகாரம் நேர்ந்தது முதல் அடிக்கடி யங்கு செல்வதுண்டு. ஆனால் அவன் நிச்சயமாய் எந்த உளவையும் கண்டு பிடிக்காததால் அங்குள்ளோர் அவன் விஷயத்தில் அலட்சியமாகவே யிருந்தார்கள்.

அங்கு வந்ததும் அவன் அம்புஜத்தைக் கேட்டான். அவள் அறைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்ட போது அங்கு அம்புஜமும் அச்சுதம்பிள்ளையும் இருப்பதைக் கண்டான். அச்சுதம்பிள்ளை "வா கிருஷ்டப்பன். என்ன சங்கதி?" என்றார்.

கிருஷ்:—சுந்தரம் என்பவன் எங்கே? அவன் உள்ளே யிருக்கிறானா?

அம்பு:—இருப்பான். இந்த வேளையில் அவனைக்காண வேண்டுமோ?

கிருஷ்:—"ஆம். முக்கியமாய்க் காணவேண்டும். அவன்றான் கொலைசெய்தவன்" என்றான்.

அச்சுதம் பிள்ளையும் அம்புஜமும் வியப்போடு "என்ன? அவனா?" என்றார்கள்.

கிருஷ்டப்பன் "சந்தேகமே யில்லை" என்று கைக்குட்டையைப்பற்றிய விஷயத்தைக் கூறினான்.

அம்புஜம் இதைக்கேட்டு திப்பிரமை யடைந்தாள். ஆனால் அச்சுதம்பிள்ளை "நான் முதலிருந்தே இப்படித் தான் முடியுமென்று எதிர்பார்த்தேன்" என்றான்.

கிருஷ்ணப்பன் "ஏன் அப்போதே நீர் எச்சரிக்கை செய்யவில்லை?" என்றான்.

அச்சு:—நான் சந்தேகம் கொள்ளப் போதுமான காரணங் களகப்படவில்லை. இக்குட்டையைப்பற்றி நான் சிந் திக்கவேயில்லை. எவனாயினும் கொலைசெய்தவன் தன் குட்டையை யங்கு விட்டு வரமாட்டான் ஆதலால் அது இரத்தினசாமிப் பிள்ளையுடையதே யென்று எண்ணினேன். ஆனால் இவன்றான் என்று நிச்சய மாய்த் தெரியுமா?" என்றான்.

கிருஷ்:—"உண்மையே. அவற்றை யெல்லாம் பின்னால் நிரு பிக்கலாம். இப்போது முன்னே யவனைச் சிறைச் செய்யவேண்டும். அவனைக் கூப்பிடுகிறாயா அம்மா?" என்று அம்புஜத்தைக் கேட்டான். அம்புஜம் "ஆகா! இதோ கூப்பிடுகிறேன்" என்றாள். பிறகு அம்புஜம் மணியடித்ததே ஒரு வேலைக்காரப் பெண் வந்தாள். கிருஷ்ணப்பன் "அவன் ஓடிப்போய்விட்டால்" என் றான். அம்புஜம் "அவன் இதுகாறும் ஓடாதவன் இப் போதேன் ஓடிப்போவான்? ஒரு நொடியில் வருவான்; அவன்மேல் சந்தேகமுண்டாகி யிருப்பது அவனுக் குத் தெரியுமோ?" என்றாள். கிருஷ்ணப்பன் "தெரி யாது" என்றான். அம்புஜம் அவ்வேலைக்காரியிடம் சுந்தரத்தை யழைத்து வரும்படி கூறினாள்.

அவள் சென்றதும் கிருஷ்ணப்பன், சுந்தரம் சீவாதார நிதியில் பங்கு வாங்குவதைப்பற்றிக் கூறினன். அச்சுதம் பிள்ளை "அவ்விஷயம் மிக்க சந்தேகமாகவே புலப்படுகிறது; அவன் அதைப்பற்றிப் பன்முறைபேசும்போது நான் கேட்டிருக்கிறேன்; ஆனல் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை; அவன் நம்பகமான ஆளாயிருந்தான்; அதனல் இதைக் கேட்க நான் மிக்க விசனப்படுகிறேன்" என்ருர்.

அம்பு:—நானும் அப்படியே விசனிக்கிறேன். எனக்குக் கொலையாளியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றே பிரியம். ஆனல் சுந்தரம் கொலையாளி யென்பது என் மனதிற்குத் திருப்தியாக இருக்கவில்லை.

அதற்குள் வேலைக்காரி வந்து "அம்மா! சுந்தரம் வீட்டில் இல்லை" என்ருள்.

கிருஷ்ணப்பன் தட்டென்றெழுந்து "ஓ! அவன் இல்லையா? எங்கே சென்ருன்?" என்ருன். அம்மாது "அய்யா! அவன் சற்று நேரத்திற்கு முன் இங்கிருந்தாகவும், டெலிபோனில் என்னமோ சங்கதி வந்ததாகவும், அதைக்கேட்டதே அவன் சட்டையையும் தொப்பியையும் போட்டுக் கொண்டு சென்றதாகவும் அவனுக்கு இரண்டாவதாகவிருக்கும் ஆள் கூறுகிருன்" என்ருள்.

கிருஷ்ணப்பன் "ஓகோ! அவன் ஓடிவிட்டான்" என்று எழுந்துபோய் வீடு முழுமையும் பார்த்தான். அவன் சாமான்கள் மட்டுமே யிருந்தன். முன்பு பார்த்த குட்டைகளுமிருந்தன. அதன்பிறகு கிருஷ்ணப்பன் அங்கிருக்கும் வேலைக்காரர் அறைகளை யெல்லாம் சோதித்தான். அம் மாதிரிக் குட்டை யெவரிடமும் அகப்படவில்லை. பிறகு நெடுநேரம் வரையில் கிருஷ்ணப்பன் காத்திருந்தும் சுந்தரம் வரவுமில்லை. அவன் எங்கு சென்ருனென்று அறியவும் முடியவில்லை.

## 12-வது அத்தியாயம்.

கிருஷ்ணப்பன் சுந்தரத்தின் சுற்றத்தார் யார் என்று கேட்டுத் தெரிந்துகொண்டு அவன் புத்திரியிருக்கும் வீட்டிற்குச் சென்று கேட்டான். அப்பெண் பெயர் மாரகதம்—அவள் "அய்யா! அவர் இங்கில்லை. அவர் எங்கிருக்கிறாரோ தெரியாது. இரண்டு மூன்று நாட்களாக நான் அவரைக் காணவில்லை. அவர் காணாமற் போய்விட்டார்" என்றாள்.

கிருஷ்:—அம்மா! அவர் ஒளிந்துகொண் டிருக்கிறார். அவரைக் கண்டுபிடிக்க வேண்டும். உண்மையில் அவர் இங்கில்லையா?

மரகதம்:—"உண்மையாகவே அவர் இங்கில்லை. ஆயினும் நீயேன் அவரைக் கேட்கிறாய்? என் கணவர் மிக்க அசௌக்கியமாக விருக்கிறார். என்னைத் தொந்தரை செய்யவேண்டாம். நான் மிக்க வேலையாய் இருக்கிறேன்; என்னை மன்னிக்கவேண்டும்" என்று கதவைக் கொஞ்சம் மூடத் தொடங்கினாள்.

கிருஷ்ணப்பன் "இவ்வீட்டைச் சோதனை செய்ய வேண்டும். அவன் சீக்கிரம் அகப்படாவிட்டால் செய்தே தீருவேன்" என்று எண்ணிக்கொண்டே உட்சென்றான்.

சுந்தரம் சிக்கிரம் அகப்படவில்லை. கிருஷ்ணப்பனும் அவன் ஆட்களும் மாரகதம் வீட்டைச் சோதித்தார்கள். சுந்தரம் அங்கில்லை. மாரகதம் "அய்யோ! என் தந்தையெங்கிருக்கிறாரோ! என் கணவனிருக்கும் நிலைமையில் அதைப்பற்றிக் கவனிக்க எனக்கு அவகாசமில்லையே" என்று பரிதபித்தாள்.

உண்மையில் மாரகதத்தின் கணவன் காசநோயால் மிக்க அபாயகரமான நிலைமையிலிருந்தான். அந்நிலைமையைக்

கண்ட கிருஷ்ணப்பன் அவளுக்குத் தொந்தரை யளிக்கலா காதென்று இரக்கத்தோடு சென்றான்.

கிருஷ்:—"சுந்தரம் ஓடிவிட்டான். அதுவே குற்றத்தை யொப்புக்கொண்டதாகும். சந்தேகமேயில்லை. அவன் அந்த ஜீவாதார நிதியில் பங்கைவாங்கித் தன் மகளுக்கு வைக்க எண்ணினான். அவன் பேருக்கே அதை வாங்கினான் என்று, அவன் எந்தத் தரகன் மூலமாய் வாங்கினானோ அத்தரகனே கூறியிருக்கிறான்" என்று அம்புஜம் முதலியவர்களிடம் கூறினான்.

விவகாரம் அவ்வாறே புலப்பட்டது. அம்புஜத்திற்கும் எல்லம்மாளுக்கும் சுந்தரத்திற்குத் தன் புத்திரியைப்பற்றி மிக்க கவலையென்று தெரியும். அவன் கணவனிறந்தால் அவள் நிராதரவாய் விடுவாளென்றும், பிறகு கஷ்டப்படவும் அவள் சக்தியுடையவளல்ல வென்றும் கருதி, அதனால் அவளுக்கு ஆஸ்திவைக்கத் தீர்மானித்தானென்பதும் தெளிவாய் விளங்கியது.

அச்சுதம் பிள்ளை, சுந்தரம் தன்னிடம் கூறியதாலேயே இச்சங்கதி தனக்கும் முன்னமே தெரியும் என்றும் அவன் தன் புத்திரிக்கு ஆஸ்தி வைக்கவே இப்படிச்செய்து விட்டான் என்றும் பரிதாபத்தோடு கூறினார். இவற்றால் சுந்தரமே கொலை செய்தவன் என்று அவர்களுக்குத் திடமான அபிப்பிராயம் ஏற்பட்டு அவனை யெப்படியேனும் கண்டு பிடிக்கவேண்டுமென்று அவர்களால் முயற்சி யெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வாறிருக்கையில் துப்பறிவதில் பிரசித்திபெற்ற கிருஷ்ணராவ் அவர்களால் வரவழைக்கப்பட்டான். அவன் மிக்க கெட்டிக்காரன் என்று மதிக்கப்பட்டாலும் முதலில் "இதில் வேலைசெய்ய அஸ்திவாரமில்லை" யென்றான். பின்னர், "கொலைநடந்த இடத்தில் உளவு கண்டுபிடிக்கக் காலம்

போய்விட்டது; என்னை யப்போதே யழைத்திருந்தால் ஏதேனும் கண்டுபிடித்திருப்பேன்; இப்போது மழைபெய்து காற்றடித்ததால் பூமியில் காலடிகள் முதலிய யாவும் மறைந்து போயிருக்கும்; ஆயினும் நான் கூடியவரையில் சாக்கிரதையாய்ப் பார்க்கிறேன்" என்றான்.

எல்லம்மாளுக்குச் சாதாரணமாகத் துப்பறிபவர்களென்றால் ஆகாது. அவள் கிருஷ்ணாராவிடம் பகிரங்கமாகவே முரட்டுத்தனமாக நடந்து கொண்டாள். கிருஷ்ணாராவ் அடிக்கடி நினைத்தபோது வீட்டிற்கு வருவதும், ஒவ்வொரு அறையையும் பார்ப்பதும், ஒவ்வொரு வேலைக்காரனிடமும் கலந்து பேசுவதும், இரத்தினசாமிப் பிள்ளையின் கடிதங்களைப் பார்ப்பதுமாக விருந்தான். இவற்றால் எல்லம்மாள் கடைசியில் அவன் முகத்தைப் பார்த்தாலும் தனக்கு வெறுப்பாயிருக்கிறதென்று கூறினாள்.

அம்புஜம் "அவன் கொலையாளியை மட்டும் கண்டுபிடிப்பதாயின் இந்த வீட்டில் எப்படியாயினும் நடந்து கொள்ளட்டும். சுந்தரம் கொலை செய்தான் என்பதைப்பற்றிக் கிருஷ்ணப்பன் நிச்சயமாக நம்புவதுபோல் கிருஷ்ணாராவ் நம்பவில்லை. அவன் 'சுந்தரம் அப்படிக் கொன்றிருந்தால் வேறொருவருக்காகக் கூலியாளாகவோ அல்லது வேறொருவரால் பலவந்தப்படுத்தப்பட்டதாலோ செய்திருக்க வேண்டும் என்கிறான்' " என்றாள்.

எல்லம்மாள், "இருக்கட்டும்; எப்படியானாலென்ன? நீ ஏன் இதில் இவ்வளவு வைராக்கியம் கொண்டிருக்க வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை; அவர் இறந்து போனார்; அவரைக் கொன்றவனைக் கண்டுபிடித்தால் அவர் பிழைத்துக் கொள்ளப் போகிறதில்லையே; என் வரையில் மனக்கலக்கத்தை யுண்டாக்கும் இவ்விஷயத்தை யடியோடு மறந்து

விடவே விருப்பம்; உனக்கென்னமோ அதே எண்ணமா யிருக்கிறது" என்றாள்.

அவள் பேசியமாதிரியால் துப்பறிபவர்களும், பிறைக பாணி, திருவேங்கடம், ஆகியவர்களும் வீட்டிற்கு வருவதும், அம்புஜம் அவர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருப்பதும் எல்லம்மாளுக்கு மிக்க வெறுப்பாயிருக்கின்றன வென்பது தெரிந்தது. அதன்மேல் அம்புஜம் அதைப்பற்றி கிருஷ்ணாவிடம் கூறியபோது அவன், "நீ அப்போதைக் கப்போது என் காரியாலத்திற்கு வருவதாயின் நான் இங்கு வருவது குறைந்துபோம்" என்றான். அதன்பிறகு அம்புஜம் அவ்வாறே செய்யத் தொடங்கினாள். அங்கு என்ன இரகசியச்சங்கதி பேசினாலும் உற்றுக் கேட்போர் ஒருவருமில்லையாதலின் அங்கு சம்பாஷிப்பதே மிக்க சௌகரியம் என்று தெரிந்தது.

அம்புஜம் தீர்க்காலோசனை செய்தபின் கடைசியில் எல்லம்மாள் கொலை நடந்த இரவு டெலிபோனில் பேசியதும், தான் அந்த நம்பரைக் கேட்டுக்கொண்டதுமாகிய விஷயங்களைக் கிருஷ்ணாவிடம் கூறினாள். அவன், "ஆ! இது முக்கியமான விஷயம். நீ ஏன் முன்னாடியே யிதைக் கூறவில்லை?" என்றான். அம்புஜம், "வீட்டில் நாம் பேசும் போது எல்லம்மாள் கேட்கும் தூரத்திலேயே யிருக்கிறாள்; ஆதலின் நான் கூறவில்லை" என்றாள். அதன்மேல் கிருஷ்ணாவ் நேராய் அந்த டெலிபோனிருக்கும் வீட்டிற்குச் சென்று அங்குள்ள ஜகநாதன் என்பவனைக் கண்டு பேசினான்.

ஜகநாதன் களங்கமற்ற உள்ளமுடையவனாதலின் தனக்குத் தெரிந்த அனேகம் சங்கதிகளைக் கூறினான். அவன், "நான் இக்கொலையைப்பற்றிப் பத்திரிகைகளில் வாசித்தேன்; இதில் பின்னால் இன்னும் விசேஷசங்கதி வெளிவரு

மென்றே எண்ணிக்கொண் டிருந்தேன்; வீட்டுக்காரியஸ்தி விஷயம் என்ன?" என்றான்.

கிருஷ்ணராவ்:—யார் எல்லம்மாளா? என்?

ஜகநாதன்:—ஒரு நாள் துயரத்தோடும் அச்சத்தோடும் கூடிய குரலோடு ஒருமாது என்னை டெலிபோன் மூலமாய் எல்லம்மாள் என்றமாது உனக்குத் தெரியுமா என்று கேட்டாள். இது அதிசயமல்லவா?

கிருஷ்:—ஆச்சரியமே. இலக்ஷ்மணன் இங்கு வசிக்க எப்படி நேர்ந்தது?

ஜக:—அவன் திடீலென்று இவ்வூருக்கு வந்த அன்று தங்க இடமில்லை என்று என்னிடம் கூறினான். நாங்கள் பாலிய சிநேகர். நான் இரண்டு நாட்களுக்கு நகரை விட்டுச் செல்கிறேன். நீ இங்கு தங்கியிரு வென்றேன்; அவன் அவ்வாறே தங்கினான். நான் திரும்பி வந்தபோது அவன் தன் சிறிய தந்தையின் மரண விசாரணைக்குச் சென்றதாகத் தெரிந்தது. எனக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்றான். இது எனக்கு வியப்பாகவே தோன்றியது.

கிருஷ்:—அவன் உன்னிடம் பேசிய யாவும் நினைவிலிருக்கின்றனவா? பண விஷயம் ஏதேனும் பேசினானோ?

ஜக:—பேசினான். தான் ஏதோ ஒரு சுரங்கக் குத்தகையெடுக்க உத்தேசித்திருப்பதாகவும், அதற்குப் பணம் வேண்டுமென்றும், அதைத் தன் சிற்றப்பனிடம் பெறக் கருதியிருப்பதகாகவும் கூறினான்.

கிருஷ்:—மரணசாசன மூலமாகவா?

ஜக:—இல்லையில்லை. சிற்றப்பனிடம் கேட்டு வாங்கப்போவதாய்க் கூறினான்.

கிருஷ்:—நீ களங்கமின்றிக் கூறுவதற்காக மிக்க வந்தனமளிக்

கிறேன். இந்த இலக்ஷ்மணனைப்பற்றி யுனக்கு இன்னும் ஏதேனும் தெரியுமா ?

ஜக:—ஒன்றுமில்லை. அந்த எல்லம்மாள் என்பவள் எம்மாதிரி யிருக்கிறாள் ?

கிருஷ்:—அழகானவள்-மாதிரி யெல்லாம் அன்னிய நாட்டு மாதிரி - கறுத்த பெரிய கண்களுடையவள்.

ஜக:—மோசக்காரிபோல்—

கிருஷ்:—ஆம். அம்மாதிரியே கூறத்தகும்.

ஜக:—அவள் கருத்துச் செழித்து வளர்ந்த கூந்தலுடையவள். அவள் கூந்தல் அவளுடைய செவிகளை மூடிக் கொண்டிருக்கும். அதை அவள் மிக்க அழகாய் வாரி முடித்துக்கொண் டிருப்பாள்.

கிருஷ்:—ஆம்; ஆம்; அதேமாதிரிதான்.

ஜக:—அப்படியாயின் இலக்ஷ்மணன், முன்ஏற்பாட்டின்படி செவ்வாய்க்கிழமை பிற்பகல் அம்மாதைச் சந்தித்துப் பேசினான். அதாவது அவன் சிறிய தந்தை கொலை செய்யப்பட்ட அதே தினம்.

கிருஷ்:—எந்த விடத்தில் ?

ஜக:—நகரப் புத்தகச்சாலையில் இருவரும் சந்தித்தார்கள். நான் தற்செயலாக அவளைக்கண்டு, அவள் அழகைப் பற்றிச் சற்றுக் கவனித்துக்கொண்டிருந்தேன். பிறகு இலக்ஷ்மணன் வந்தான். அவன் முன்னமே யவள் அங்கு வந்திருக்கிறாளென்று அறிந்திருப்பவன் போல் சந்தோஷத்தோடு அவளிடம் பேசத் தொடங்கினான். அவள் அவனிடம் ஒரு சிறு சிப்பத்தை யளித்தாள். பிறகு இருவரும் மிக்க அக்கரையாகப் பேசினார்கள். என்னை யவர்கள் காணவேயில்லை. நான் அன்னியர் விஷயமாக ஒரு தகவலைப்பார்க்க அங்கு சென்றிருந்த

படியால் கொஞ்சநேரமே யங்கிருந்தேன். அப்போது இலக்ஷ்மணன் என் அறைகளிற்றான் இருந்தான்.

கிருஷ்:—அப்போது மணி என்ன இருக்கும்?

ஜக:—அப்போது இரண்டரை மணியிருக்கும். நான் மறுபடி என் ஆட்களை மூன்றுமணிக்குப் பார்ப்பதாய் அவர்களிடம் வாக்களித்திருந்தேன்; அங்கு அரைமணியே எனக்கு அவகாசமிருந்தது. அதனால் அப்போது என்ன மணி யென்று எனக்கு நன்றாக நினைவிருந்தது.

கிருஷ்:—இது மிக்க முக்கியமான விஷயம். சமயம் நேரும் போது அவசியமாயின் நீ பிரமாணிக்கத்தின்மேல் இதே மாதிரி சாக்ஷி பகர்வாயல்லவா?

ஜக:—நான் கூறும் யாவும் சந்தேகமின்றிச் சத்தியமே. ஆனால் இலக்ஷ்மணனுக்கு ஆபத்தை யுண்டாக்குவதாயின் அதைச் செய்ய எனக்கு விருப்பமில்லை.

கிருஷ்:—அப்படியல்ல. நீ யிதைக் கூறுவதால் இலக்ஷ்மணனே ஆபத்திற் சிக்கிக் கொள்வானென்று நாம் நினைப்பதற்கில்லை. அந்த எல்லம்மாள் என்ற மாதே, இப்போது நமக்குத் தெரிந்திருப்பதைவிட அதிகமாகச் சம்பந்தப்பட்டிருப்பாள் - இலக்ஷ்மணன் அவளைத் தன் சிற்றப்பன் வீட்டில் சந்தித்ததற்கு முன் பார்க்கவே யில்லை யென்று கூறுகிறான். அதாவது அவன் சிற்றப்பன் இறந்தபின் அவன் அந்த மாண விசாரணைக்கு வந்திருந்தானே அதற்குமுன் காணவேயில்லை என்கிறான்.

ஜக:—சட்! இது பெரும்பொய். அவன் அவளைப் பல வருடங்களாய் அறிவான் - தென்னூரில் இருவரும் சந்தித்தது முதல் இவர்கள் சினேகிதர்களாயிருக்கிறார்கள்.

கிருஷ்:—இதுவும் மிக்க பிரதானமான விஷயமே. அப்படி யிருக்க அவன் ஏன் அதை மறைக்கவேண்டும்?

ஜக:—"இதென்னமோ எனக்குத் தெரியவில்லை. நான் கூறியது என்னமோ உண்மை. இலக்ஷ்மணன் என்னமோ எப்போதும் ஒருவிதமான சுபாவமுடையவன். அவன் கல்லூரியில் வாசிக்கும்போது பட்டம் பெறுமுன்பே இதே சிற்றப்பனிடம் சச்சரவு செய்து கொண்டு கல்லூரியை விட்டுவிட்டுப் போய்விட்டான். இரத்தின சாமிப்பிள்ளை யவனைப் பூராவாகப் படிக்க வைக்கவே கருதினர். ஆனால் அவனே எந்த விஷயத்திலோ அவரோடு சச்சரவு செய்துகொண்டு யாவரையும் விட்டு மேற்கு நாட்டிற்குப் போய்விட்டான். அது முதல் இப்போது இங்கு வருமட்டும் அந்த நாட்டிலேயே யிருந்தான். அவன் இந்த விஷயத்தில் வந்து சம்பந்தப்படாமல் இங்கே இருந்து விட்டிருக்கலாகாதா கடவுளே!" என்றான்.

கிருஷ்:—அப்படியாயின் அவன் இந்த விஷயத்தில் சம்பந்தப்பட் டிருக்கிறானென்று நீ கருதுகிறாயல்லவா?

ஜக:—நான் அப்படிக் கூறமாட்டேன் - போலீஸார் அவன் இதில் சம்பந்தப்பட் டிருக்கிறானென்றே கூறிக்கொண் டிருக்கிறார்களென்று எனக்குத் தெரிகிறது. பத்திரிகைகள் என்னமோ யாராவது தகுதியானவர்கள் மேல் இக்குற்றத்தைச் சுமத்த முயலும் என்பது தெரிந்த சங்கதியே. அவர்களுக்குச் சற்று உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஆள் சிக்குவதாயின் அவர்கள் சாதாரணக்கள்ளர் கொலையாளிகள்மேல் இதைச் சுமத்தக் கருதமாட்டார்கள். இப்போது அவர்கள் அப்படி நினைக்கிறார்களா?

கிருஷ்:—நான் கூறமுடியாது. நான் இப்போது தான் இந்த

விஷயத்தில் பிரவேசித்தேன் - முன்பே பிரவேசித் திருந்தால் எவ்வளவோ நன்ருக விருந்திருக்கும். இத் தகைய விஷயங்களில் ஆரம்பத்திலேயே வேலை செய் யத் தொடங்கினுல் எவ்வளவோ அனுகூலமிருக்கிறது.

ஜகநாதன்:—ஆம். ஆம். ருசுவுகளெல்லாம் புதிதாக விருக் கும்போது நான் உனக்கு எந்த வழியாகவாவது உதவி செய்யவேண்டியிருந்தால் என்னை யழை. இலக்ஷ் மணன் என் நண்பன்; ஆனுல் அவன் நிரபராதியா யிருந்தால், ஆராய்ச்சி செய்வதால் அவனுக்கு ஒரு கெடுதியும் உண்டாகாது. அவன் குற்றம் செய்திருந் தால் காட்டிக் கொடுக்கப்படவேண்டியதே.

அதன் பிறகு கிருஷ்ணுராவ் அவனிடமிருந்து விடை பெற்றுச் சென்ருன். அவன் மனதில் பலப் புது அபிப் பிராயங்களுண்டாயின. இலக்ஷ்மணனே தன் சிறிய தங் தையைக் கொன்று விட்டிருந்தால் அதற்குப் பொருத்த மான ருசுவுகள் பல இப்போது கிடைத்திருக்கின்றன. இலக்ஷ்மணனும் எல்லம்மாளும் பழைய சிநேகிதர்களாக விருந்து இப்போதவர்கள் அதை மறைப்பதாயின், அந்த ஒரு விஷயமே மிக்க சந்தேகத்தை யுண்டாக்கக்கூடிய விஷ யம் - அவர்கள் இருவரும் நிரபராதிகளாயிருந்து இக்கொலை யில் சம்பந்தப் படாதவர்களாகவே யிருந்தால் இவர்கள் இருவரும் இரகசியமாய்ச் சந்திப்பானேன்? பகிரங்கமாய் இரத்னசாமிப் பிள்ளையின் வீட்டிலேயே சந்திக்கலாமே. அதோடு முன்பே யிருவரும் அறிமுகமாகி யிருப்பதை யேன் மறைக்க வேண்டும்? இவற்றிற்குக் காரணம் திருப்திகரமாய் நன்ருய் வெளியாக வேண்டும்.

அதோடு எல்லம்மாள் இலக்ஷ்மணனிடம் கொடுத்த சிப்பத்தில் என்ன விருந்தது? அது ஒரு செங்கல் அளவு இருந்த தென்றும், ஆனுல் அதைவிடத் தட்டையாக

விருந்த தென்றும் ஜகநாதன் கூறினன். அது சுந்தரத்தின் ஒரு கைக் குட்டையாக விருக்குமா? கிருஷ்ணுராவின் புத்தி மிக்க கலவர நிலைக்கு வந்துவிட்டது. இவர்களிருவருமே அக்கொலையில் சம்பந்தப்பட் டிருந்தால், இரத்னசாமிப் பிள்ளை மரிக்கும்போது கூறியது இந்த இலக்ஷ்மணன் பெயராகவே யிருந்தால், அந்த எல்லம்மாள் முன்னடி செய்துகொண்ட சதியாலோசனைப்படி, அந்தச் சுந்தரத்தின் மேல் இக்குற்றத்தைச் சுமத்துவதற்காக அவன் கைக்குட்டையைக் கொண்டு போய் இலக்ஷ்மணனிடமளித் திருக்கலாமல்லவா? இலக்ஷ்மணன் வேண்டுமென்றே யதை யங்கு வைத்திருப்பான். சுந்தரம் அதை யறிந்ததும் பீதியால் ஓடி விட்டிருக்கலாம். ஏனெனில் தன் நிரபராதத் தனமையை ருசுப்படுத்த முடியாதென்று அவன் பயந்து விட்டிருப்பான்.

இவையாவும் உத்தேசங்கள் என்பது உண்மையே. அவற்ருேடு கடித மூலமாய் இருக்கும் சாங்கியங்களையும் நன்ருய்க் கவனித்தான் - டெலிபோனில் அனுப்பப்பட்ட சங்கதியைக் கவனித்தான். அதில் சிற்றப்பா, மனோஞ்சித அத்தர், கருங்கடல் என்ற வார்த்தைகள் இருந்ததாக உலகாம்பாள் என்பவள் கூறியிருக்கிருள். அவை சமாசாரமனுப்பியவன் வேடிக்கையாகக் கூறியவையாகவாவ திருக்கவேண்டும்; இன்றேல் அவள் புத்தி கலவரத்தால் அப்படி எண்ணிக்கொண் டிருக்கவேண்டும்.

கிருஷ்ணுராவ் இவ்வாறு சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் திடீலென்று "எதற்கும் அந்த உலகாம்பாளைக் கண்டு பேசிப்பார்ப்போம்" என்று அவன் மனதில் ஒரு யோசனை யுதித்தது - அவ்வாறே நேராய் அவள் இருக்குமிடத்திற்குச் சென்று அவளைக் கண்டு விசாரிக்கத் தொடங்கி,

"ஏனம்மா, அவ்வாறு டெலிபோனில் அன்று பேசியவன் ஆடவனே என்று நிச்சயமாய்த் தெரியுமா?" என்று கேட்டான்.

உலகாம்பாள்:—ஆகா. நிச்சயமே.

கிருஷ்:—அப்படிப்பேசிய ஆள் இலக்ஷ்மணனாக இருக்கலாமென்று உனக்குத் தோன்றுகிறதா?

உல:—"ஆகா; அவன் இலக்ஷ்மணனாகவே யிருக்கலாம்; அல்லது சுந்தரமாக விருக்கலாம்; அல்லது நம் காட்டினாசராக விருக்கலாம்; யாராகவேண்டுமாயினு மிருக்கலாம். பேசியவன் யாராயிருந்தாலும் அந்த ஆள் வேணுமென்றே தன் இயற்கைக்குரலை மறைத்து மாற்றிப் பேசினான் என்றுதான் நான் முன்னமே கூறினேனே. அவன் வேணுமென்றே ஒருவித கீச்சுக்குரலாய்ப் பேசினான். ஆனால் ஆடவனே. அப்பா! துப்பறியும் நீங்கள் என்னை யலைக்கழித்து விடுகிறீர்கள். அது மறைத்து மாற்றிப் பேசப்பட்ட குரலாதலின் அவன் யார் என்று கூறமுடியாது; இதுவே யுண்மை. அப்படிக்கூறினாலும் நீ அதுவா? இதுவா? என்று கேட்கிறாய். அது யார் குரலென்று கூறமுடியாது என்றே நான் சொல்லுகிறேன். அவன் யார் என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் மாண விசாரணையிலேயே கூறியிருப்பேன். நான், நீதி சரியாய் நடப்பதற்கு இடையூறு செய்யும் குணமுடையவளல்ல. நான் அப்படிச் செய்யமாட்டேன்" என்றாள்.

கிருஷ்:—சரி. குரலைப்பற்றிப் பேசுவதை விட்டு விடுவோம். அவன் கூறிய வார்த்தைகளைப்பற்றிச் சொல்லு கேட்போம்.

உல:—கடவுளே! நான் அவற்றை யொருபோதும் கேட்காமலிருந்தால் நலமாக விருந்திருக்கும். அவற்றில் மனோ

ரஞ்சித அத்தர் என்பதொன்று. மறுபடி அதைப்பற்றி யென்னைக் கேட்பவன் எனக்கு அதில் ஒருபுட்டி வாங்கித் தரவேண்டும். ஒரு காலத்தில் நான் ஒரு புட்டி வைத்துக்கொண் டிருந்தேன்.

கிருஷ்:—தெரியும், தெரியும். அதனால்தான் அது உனக்குத் தெரியும்,

உல:—"ஆம், இனி கருங்கடலைப்பற்றிப் பேசுவோம். ஒருவன் இரத்தினசாமிப்பிள்ளையைக் கருங்கடலுக்கு ஏன் அழைக்க வேண்டுமென்பது எனக்கு ஒன்றுமே தெரியாது. யாரேனும் அவரை ஏன் அங்கழைத்துச் செல்ல வேண்டுமென்பது எனக்குத் தெரிந்திருந்தால் நான் முன்னமே கூறியிருப்பேன். ஆனால் யாரோ கூறினார்கள். நான் காதாரக்கேட்டேன். ஆம் உண்மையாய்க் கேட்டேன்" என்றாள்.

கிருஷ்ணராவ் மறுபடி யவளை நல்லதனமாய்ப் புகழ்ந்து கூறிக்கேட்டான். அதன்மேல் அவள், "அவன் அவருக்குப் போன் வைக்கப்பட்டிருக்கிறது என்று கூறினது உண்மையே. ஆனால் யார் வைத்திருக்கிறதென்பது தெரியாது" என்றாள்.

கிருஷ்ணராவ் அம்புஜத்தினிடமும் அச்சுதம்பிள்ளையிடமும் தான் ஜகநாதனைக்கண்டு பேசிய விஷயங்களை யெல்லாம் வெளியிட வேண்டும். இலக்ஷ்மணன் இதில் சம்பந்தப் பட்டிருப்பதைக் கேட்க அம்புஜத்திற்குச் சந்தோஷமாகவாவது திருப்தியாகவாவது இராதென்று கிருஷ்ணராவ் எண்ணியிருந்தான். அம்புஜம் அச்சுதம்பிள்ளையை மணம் புரிந்துகொள்ள ஏற்பாடாயிருப்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் இருவரும் சம்பாஷித்ததை அவன் கேட்டிருக்கிற வரையில் அவனுடைய சூக்கும புத்திக்கு அம்புஜம் அச்சுதம்பிள்ளைமேல் பூரண காதல்கொண்டிருப்ப

தாய் அவனுக்குப் புலப்படவில்லை. அதைப்பற்றி யவனுக்கு அவசியமில்லை. ஆயினும் அம்புஜம் யார்மேல்தான் உண்மையில் காதல்கொண் டிருக்கிருள் என்பதை அறிய வேண்டும் என்பது மட்டும் அவன் விருப்பம். அதோடு அம்புஜம் எல்லம்மாள் வசிகாமாயிருக்கிருள் என்பதற்காக அவள் மேல் பொருமைகொண் டிருக்கிருள் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனல் அப்பொருமை இலக்ஷ்மணனுக்காகவா அல்லது அச்சுதம்பிள்ளைக்காகவா என்று அவனுக்குத் தெரியவில்லை. அதைத் தன் வழியாகக் கண்டுபிடிக்க வெண்ணிக்கொண்டான். ஏற்பாட்டின்படி அம்புஜம் கிருஷ்ணாவின் காரியாலயத்திற்கு வந்தாள். அவளுடைய கன்னங்கள் சிவந்திருந்தன. புது சங்கதியை கேட்கவேண்டுமென்ற மனத்துடிப்பு அவள் கண்களில் தோன்றியது. கிருஷ்ணாவ் முகமலர்ச்சியோடு அவளுக்கு நல்வரவு கூறி அவளை யுட்காரச்செய்தான்.

அம்பு:—"நீ ஜகநாதம் பிள்ளையிடமிருந்து ஏதோ விசேஷ சமாசாரம் கொண்டுவந்ததுபோல் உனது முகத்தால் தெரிகிறது" என்ருள். கிருஷ்ணாவ் ஆம் என்ருன். அம்புஜம் "அப்படியாயின் கூறு. நான் மிக்க ஆவலோ டிருக்கிறேன்" என்ருள்.

கிருஷ்:—நான் ஒரு புது உத்தேசங்கொண் டிருக்கிறேன். எல்லம்மாள்தான் குற்றவாளியென்று நான் கருதுகிறேன்.

இதைக்கேட்டதே அம்புஜம் ஏறக்குறைய நகைத்துவிட்டாள். "என்ன அசம்பாவிதம்! அன்று பிற்பகலெல்லாம் அவள் என் கூட விருந்தாளே" என்ருள்.

கிருஷ்:—அதுதான் இருக்கிற விஷயம். உன்னை வீட்டிலேயே யிருக்கச் செய்வதற்காக அவள் உன் கூடவே யிருந்தாள். அவள் குற்றவாளியென்று நான் கூறிய

தால் அவள் கையாலேயே அது செய்யப்பட்டது என்று அர்த்தமல்ல. அவளே அதைத் தூண்டினவள்.

அம்பு:—அவளுடைய உடந்தையாள் யார்?

கிருஷ்:—சந்தேகமின்றி வேலையாளான சுந்தரமே.

இதைக் கேட்டபோது அம்புஜம் கொஞ்சம் விருப்பம் காட்டினுள். சாதாரணமாய்ச் சுந்தரத்தை யவள் அவ்வள வாய் விரும்பவில்லை. அவன் சூதும் கபடமுமுடையவன் என்பது அவள் அபிப்பிராயம். "அவன் எப்படி யதைச் செய்தான்?" என்று கேட்டாள்.

கிருஷ்:—ஏன்? சுலபமாகவே. அவன் சமையலறைக்குச் சென்றதும் அங்கு அகப்பட்ட ஒரு கத்தியை யெடுத் துக்கொண்டு கற்பகச்சோலைக்குச் சென்றுன். அங்கு அவரைக் கண்டதும் அக்கத்தியால் கொன்று விட்டான்.

அம்பு:—சிற்றப்பா அங்கு சென்றிருக்கிறுர் என்று அவனுக் கெப்படித் தெரியும்?

கிருஷ்:—அவர் யங்கு வரும்படி அவருடைய காரியாலத் திற்கு டெலிபோன் மூலம் சங்கதி யனுப்பினுன்.

அம்பு:—உலகாம்பாள், டெலிபோனில் சங்கதி யனுப்பியவன் அவரைச் சிற்றப்பா என்று அழைத்தான் என்று கூறி யது கவனமிருக்கிறதல்லவா?

கிருஷ்:—ஆம். சுந்தரமே அதைச் செய்தான். தப்புவழி காட்டுவதற்காக.

அம்பு:—இலக்ஷ்மணன் மேற்கு நாட்டிலிருந்து இங்கு வந் திருப்பது சுந்தரத்திற்குத் தெரியாதே.

கிருஷ்:—இல்லை. அவனுக்குத் தெரியும். அன்றிரவு இலக்ஷ் மணன் டெலிபோனில் தான் வந்திருப்பதை யுன் சிற் றப்பனுக்குத் தெரிவித்தான். நீங்கள் ஒருவருமிங்

கில்லை யாதலின் சுந்தரமே அச்சங்கதியை வாங்கிக் கொண்டான்.

அம்பு:—உனக்கெப்படி யது தெரியும்?

கிருஷ்:—நான் அதை மற்ற வேலைக்காரர் மூலமாகத் தெரிந்து கொண்டேன்.

அம்பு:—நீ யவர்களிடம் சுந்தரத்தைப்பற்றிப் பேசினுயோ?

கிருஷ்:—இல்லை. முன்னே யுன்னிடம் பேசவே கருதி னேன்.

அம்பு:—கிருஷ்ணுராவ்! நான் மனம்விட்டுக் கூறுகிறேன். இக்குற்றத்தைப்பற்றி இலக்ஷ்மணன்மேல் சந்தேக முண்டாவது எனக்கு விருப்பமில்லை. அவர் நிரபராதி யென்று நானறிவேன். அவர்மேல் விரோதமான வெளியத்தாட்சிகள் சில விருக்கின்றன வென்று எனக்குத் தெரியும். ஆனுல் சரியான ருசு வொன்றுமே யில்லை. அவர் பூராநிரபராதி. இப்போது சுந்தரமும் நிரபராதியாயின் அவன்மேல் சந்தேகத்தை யுண்டாக்க எனக்கு விருப்பமில்லை. அவன் மேலும் உன்னிடம் சரியான ருசு விருப்பதாய் எனக்குப் புலப்பட வில்லை.

கிருஷ்:—ஆனுல் அவன் இன்னெருவர் கையாயுதமாக விருந்தான் என்பதே என் அபிப்பிராம்.

அம்பு:—மூலமான ஆள் யார்? எல்லம்மாளா?

கிருஷ்:—ஆம்.

அம்பு:—சுத்த அசம்பாவிதம் - நம்பத்தகாதது.

கிருஷ்:—ஒருபோதுமில்லை. எல்லம்மாள் உன் சிற்றப்பனை மணம்புரிய ஒப்பந்தம் செய்துகொண்டாள். ஆனுல் அவள் அவருடைய சொத்துக்காக அப்படிச் செய்தாளேயன்றி அவர்மேல் அவளுக்கு உண்மையான அன்பில்லை. இதற்கிடையில் தனக்கு நெடுநாட்களாக

அறிமுகமான இலக்ஷ்மணன் மேற்கு நாட்டிலிருந்து வந்திருக்கிறான் என்பதை யறிந்தாள். அதன்மேல் இவரை யொழித்துவிடுவது நலமென்று கருதினாள்.

அம்பு:—சிற்றப்பாவுக்கு வயது அறுபதாகவில்லையே.

கிருஷ்:—ஆயினும் இலக்ஷ்மணனை நோக்கும்போது. எப்படியாயினும் இது ஆராய்ந்தறியத்தக்க விஷயம்.

அம்பு:—அப்படியாயின் இதைப்பற்றி அச்சுதம்பிள்ளையிடம் ஆலோசிக்க வேண்டியதே.

---

## 13-வது அத்தியாயம்.

கிருஷ்ணராவ் ஜகநாதனைக்கண்டு பேசி, அவன் கூறிய சங்கதிகளை யறிந்து கொண்டபோது, இலக்ஷ்மணனே இக்கொலைக்குக் காரணபுருடனென்றும், எல்லம்மாள் அவனுக்கு உடந்தையாக விருந்தவளென்றுமே அபிப்பிராயப்பட்டது இதை வாசிப்போருக்கு நினைவிருக்கலாம். ஆகையால் அவன் அம்புஜத்தினிடம் பேசும்போதெல்லாம் அதை மறைத்து, தான் சுந்தரனே கொலை செய்தவனென்றும், எல்லம்மாள் உடந்தையாயிருந்து தூண்டியவளென்றும் அபிப்பிராயப்பட்டதாகப் பேசியது அபிநயமே யன்றி யுண்மையல்ல.

இப்போது அம்புஜமும் கிருஷ்ணராவும் அச்சுதம்பிள்ளையோடு இதைப்பற்றி ஆலோசனை செய்வதற்காக அவருடைய காரியாலத்திற்குச் சென்றபோது கிருஷ்ணராவ் அபிநயப்பேச்சை விட்டுவிட்டுத் தன் அபிப்பிராயப்படி யுண்மையாய்ப் பேசத்தொடங்கினான். அதாவது தான் ஜகநாதனிடம் பேசியபோது நடந்த சம்பாஷணையை யப்படியே கூறினான். அதனால் இலக்ஷ்மணனே குற்றவாளி யென்பது வெளியாயிற்று.

கிருஷ்ணராவ்:—அப்படியாயின் புத்தகசாலையில் அவனைக் கண்டு பேசியவள் எல்லம்மாளாகவே யிருக்கவேண்டும் என்று ருசுவாகிறது. வேறு யாராகவு மிரார்.

கிருஷ்ணராவ் கூறியதைக் கேட்ட அம்புஜம் மிக்க கோபத்தோடு "ஏன் வேறு யாராவதாக விருக்கலாகாது?" என்றாள்.

கிருஷ்ணராவ்:—ஜகநாதன் அவளை யங்கு பார்த்ததனாலும் பத்திரிகைகளில் அவள் உருவப் படத்தைப் பார்த்ததனாலும் அவளே யென்பது நிச்சயமாக அவனுக்கு விளங்குகிறது. அவளும் அவனும் தென்னூரி லிருந்த போது முதல் சினேகர்களாக விருந்திருக்கிறார்கள். அந்த விஷயத்தை யவர்கள் மறைத்து வைத்ததே சந்தேகத்திற்கிடம். இந்தக் கிழவன், சுந்தரம் சந்தேகிக்கத் தக்கவனே யல்ல. இவனுக்கு ஜீவாதார சங்கத்தில் பாகம் வாங்கப் பணம் வேண்டியிருந்தது என்னமோ உண்மையே. ஆயினும் இவன் அதற்காக இத்தகைய கொலைத் தொழிலைச் செய்யத் தக்கவனல்ல.

அம்புஜம்:—ஒரு மனிதனுடைய மைத்துனி புத்திரனே செய்யக்கூடிய இதை அன்னியனாகிய இவன் என் செய்திருக்க மாட்டான்?

அச்சு:—"அவன் அப்படி நெருங்கிய பந்து வல்ல; கிருஷ்ணராவ்! உன் அபிப்பிராயத்திற்கு உடந்தையாய்ப் பேச வேண்டு மென்பது என் அபிப்பிராயமல்ல, ஆனால் அந்தப் புத்தகசாலையில் நடந்த விஷயம் திடுக்கிடத்தக்கதாக விருக்கிறது. இலக்ஷ்மணனுக்கு என்னமோ தனக்குப் பிரியமானவர்களை விருப்பமுள்ள இடத்தில் சந்தித்துப் பேசச் சுதந்தரமிருக்கிறது. ஆனால் அவளை

முன்னமே யறிந்திருப்பதை யேன் மறைக்க வேண்டும்?" என்றார்.

அம்பு:—"அதற்கு அனேக நல்ல காரணங்கள் அவருக்கிருக்கலாகும்; தாங்கள் அவருக்கு விரோதியாகத் திரும்பவேண்டாம்; அவர் அத்தகைய காரியத்தைச் செய்யத் தக்கவ ரல்ல வென்பது உமக்குத் தெரியுமல்லவா" என்று வேண்டிக் கொள்கிறவள் போல் கூறினாள்.

அச்சு:—"இலக்ஷ்மணன், சுந்தரம் இவர்களிருவரில் சுந்தரமே இதைச் செய்தான் என்பதை யறியவே யெனக்குப் பிரியம். ஆனால் இதைப்போன்ற அத்தாட்சிகளை அலட்சியம் செய்யலாகாது. அன்று பிற்பகல் எல்லம்மாள் வெளியில் சென்றாளோ?" என்று அவளைக் கேட்டார். அம்புஜம் விருப்பமில்லாமலே "ஆம் போசனத்திற்குப்பின் சென்று ஒரு மணி நேரங்கழித்து வந்தாள்" என்றாள்.

அச்சுதம்பிள்ளை "சரி, புத்தகசாலைக்குப் போய் வரப் போதுமான காலம்" என்று கூறிவிட்டுக் கிருஷ்ணாவை நோக்கி, "சுந்தரத்தின்மேல் இக்குற்றத்தைச் சாட்டுவதற்காக எல்லம்மாள் அவன் குட்டையை யெடுத்துச் சென்றாள் என்று அத்தாட்சி காட்டுகிறாய். இது நம்புவதற்கு, அதிக முன் ஆலோசனையோடு நடந்ததாக வல்லவோ தெரிகிறது" என்றார்.

அம்பு:—"ஆம்; ஆம். சந்தேகமின்றி. இலக்ஷ்மணன் இவ்வளவு நிதானமாக ஆலோசனை செய்யத் தக்கவரல்ல; அவர் ஆத்திரமும் படபடப்பும் உடையவர்; அவர் என்னமோ கொல்ல வில்லை; அப்படிக் கருதுவதாயின் அவர் சண்டைநேர்ந்து, அல்லது அளவுமீறிய கோபமூட்டப்பட்டு அப்படிச் செய்திருக்க வேண்டும்.

கிருஷ்ணராவ்! நீ இங்கு வாராமலே இருந்திருந்தால் நலமாக விருந்திருக்கும். சுந்தரம் குற்றம் சாட்டப் படுவது எனக்கு விருப்பமில்லை; ஆனால் இலக்ஷ் மணன் குற்றம் சாட்டப்படுவதாயின் அதை விட சுந் தரமே சாட்டப்படலாம். நீ இதோடு நின்றுவிடு; நீ கண்டு பிடித்த இத்தவறான அபிப்பிராயங்களை வெளியிற் கூறாதே" என்றாள்.

அச்சுதம் பிள்ளை மெதுவாக:—"அம்புஜம்! பொறு பொறு. அத்தாட்சிகளை நாம் இப்படிப் புறக்கணித்து விடலா காது. இவற்றை யாராய்ச்சி செய்தே தீரவேண்டும். இவற்றைத் துரைத்தன வக்கீலிடம் கூறவேண்டும்- பிறகு ஆராய்ந்து பார்த்து இலக்ஷமணன் நிரபராதி யென்றால்-சந்தேகமின்றி நிரபராதியே - அவன் சுலப மாய் இச்சந்தேகங்களை யெல்லாம் நீக்கி விடலாம்" என்றார்.

அம்புஜம் கோபத்தோடு:—"அவர்மேல் குற்றம் சாட்ட வேண்டாம்; எல்லம்மாளிடம் சென்று அவள் எடுத் துக்கொண்டு சென்ற சிப்பத்தில் என்ன இருந்த தென்று அவளைக் கேளும்; அவர்கள் இருவரில் ஒருவர் குற்றம் செய்திருந்தால் அக்குற்றவாளி அவளே. சிற் றப்பா இறந்ததினம் இரவு அவளே இலக்ஷ்மணனுக்கு டெலிபோன் மூலமாய்ச் சங்கதி கூறினாள்..." என்று அவசரப்பட்டுக் கூறிவிட்டுப் பிறகு தட்டென்று நிறுத்தி விட்டாள்.

அச்சு:—"என்ன கூறினாள்?" என்றார். அவரும் கிருஷ்ணரா வும் பார்த்த பார்வையால் அம்புஜம் இனி மறைக்க முடி யாதென்றுணர்ந்து, "மறுநாள் அதேவேளைக்கு அதே யிடத்தில் அவரைச் சந்திப்பதாகக் கூறினாள்" என்றாள். அவர்கள் இருவர்க்கும் நடந்த சங்கதி இவ்வளவு

மட்டுமே யிராதென்று புலப்பட்டதால் அவர்கள் அவளை யின்னும் கிளறிக் கேட்கக் கடைசியில் தான் அவர்களிருவரையும் மரண விசாரணை யன்று அறிமுக மாக்கி வைத்ததற்கு முன்பே அவர்கள் ஒருவருக் கொருவர் சிநேகமாயிருந் திருப்பதாகவே தனக்குப் புலப்பட்டதென்று கூறினாள்.

கிருஷ்:—அவர்கள் ஏதோ ஒரு விவகாரத்தை மறைக்க வேண்டுமென்று கருதியிருந்தார்கள் என்பதையன்றி அச்சங்கதியை மறைத்து வைத்ததற்கு வேறு காரண மென்ன விருக்கிறது?

அம்பு:—இருந்தாலென்ன? அது சிற்றப்பாவின் மரணத் தோடு சம்பந்தப்பட்டதா யிராது. அவர்கள் தென் னூரில் அறிமுகமாக இருந்தவர்களானால், அங்கு நடந்த ஏதோ ஒரு விசேஷம் இருக்கும். அது அன்னி யருக்கு வெளியிடத்தகாததா யிருக்கும்.

அம்புஜம் தனக்குள்ளாக விருக்கும் சந்தேகத்திற்கு மாறாகவே வாதித்தாள். அவள் மனதில் ஒருவிதப் பீதியும் திகிலும் உண்டாயின. இலக்ஷ்மணன் கொலைக் குற்றம் சாட்டப்படுவான் என்ற எண்ணத்தோடு அவன் எல்லம் மாள்மேல் காதல் கொண்டிருக்கிறான் என்ற நினைவும் வந்து விடவே அவள் மனம் சொல்லொணு வேதனையடைந்தது. அவர்களிருவரும் காதலராயிரா விட்டால் அவர்களுக்குள் இரகசிய சம்பாஷணைகள் நடைபெறு வென்று அவள் புத்தி யிற்பட்டது. அப்படியிருந்தும் அவன் தன் மேல் காதல் கொண்டிருப்பதாகக் கூறி யிருக்கிறான். நடந்த சங்கதி களை யெல்லாம் நோக்கின் அவன் வார்த்தைகளை யெவ்வளவு வரை நம்பலாகும் என்று அவளுக்கு ஐயம் உண்டாகி விட் டது.

அம்புஜம் கடைசியில் கிருஷ்ணாராவை நோக்கி "நான்

முன் கூறியவைகளையே மறுபடி கூறுகிறேன். அதாவது இந்த வேலையிலிருந்து உன்னை விடுதலை செய்து விட்டேன். இதற்காக நீ செலவழித்த காலத்திற்கும் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கும் எவ்வளவு பணம் சேரவேண்டுமோ அதை யளித்து விடுகிறேன்" என்று கூறியதும் துயரத்தை யடக்கமுடியாமல் தேம்பியழத் தொடங்கினள்.

அச்சுதம்பிள்ளை அவளுக்குத் தேறுதல்கூற முயன் ருன். ஆனல் அவள் மறுத்துவிட்டாள். "நீங்கள் கூடவா —இலக்ஷ்மணன் நிரபராதியென்று உமக்குத் தெரிந்திருந் தும் - அவரை யிதில் சம்பந்தப்படுத்திவிடப் பிரியப்படுகி றீர்கள்" என்ருள்.

அச்சு:—ஆ! பொறு பொறு. கண்களைத் துடைத்துக் கொண்டு உன் அறைக்குச்செல். நான் இவ்விஷயத் தைப்பற்றி கிருஷ்ணாராவோடு கலந்து பேசுகிறேன். இலக்ஷ்மணனுக்கு விரோதமாகத் தோன்றும் அத் தாட்சிகளை நம்பக்கூடாதென்பதற்குக் கொஞ்சமேனும் காரணம் அகப்படுமாய் - நான் அப்படியே அவசியம் செய்வேன் என்பதை நம்பு.

அம்பு:—"அவ்வாறு செய்யக்கூடுமல்லவா?"

அச்சு:—"நீயே யிரு, நான் வந்து எல்லாச் சங்கதியும் கூறு கிறேன். நீ பொறுமையாயிரு" என்று கூறினர்.

அம்புஜம் அவ்வாறே தன் அறைக்குச் சென்றபின் கிருஷ்ணாராவும் அச்சுதம்பிள்ளையும் துரைத்தன வக்கீலிடம் சென்ருர்கள். கிருஷ்ணாராவ் தான் புதிதாகக் கண்டறிந்த விஷயங்களை யெல்லாம் கூறினன். வக்கீல் மிக்க ஆவலோடு யாவும் கேட்டுக்கொண்டு கண்டுபிடித்திருக்கும் ருசுக்க ளோடு அவற்றைப் பொருத்திப் பார்த்தார்.

"இலக்ஷ்மணன் தான் கூட்டாகச்சேர்ந்திருக்கும் தென் ஞரிலுள்ள ஒரு வர்த்தகச்சங்கத்திற்கு ஐம்பதினயிரம்

டாலர்கள் அனுப்பியிருக்கிருன். மாணசாசனத்தில் அவனுக்கு வைக்கப்பட்ட பணம் இன்னும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அது கிடைக்கும் என்ற நம்பிக்கையின்மேல் கடன் வாங்கியிருக்கிருன். இது அவனுக்கு விரோதமான அத்தாட்சியாகாது. ஆயினும் இந்த விஷயங்களைப் பூரணமாக ஆராய்ந்து பார்த்தே தீரவேண்டும். இலக்ஷ்மணன் ஒருவித அபூர்வமான மனிதன். சுலபத்தில் சிக்கக்கூடியவனல்ல. நாம் அவன்மேல் சந்தேகப்படுகிறோம் என்று தெரிந்தால் அவன் எங்கேனும் மறைந்துகொள்வான் என்று நான் நினைக்கிறேன். அந்த எல்லம்மாளைச் சோதித்துப் பார்ப்போம். அவள் தற்புகழ்ச்சியை விரும்புகிறவள். நமது கிருஷ்டப்பனை யனுப்பி அவன் சுந்தரத்தின் மேலேயே சந்தேகம் கொண்டிருப்பதாக அவளிடம் பேசினுல் அவள் தனக்கும் இலக்ஷ்மணனுக்கும் இருக்கும் சம்பந்தத்தைப் பற்றி வெளியிட்டு விடுவாள். நீ யெப்படி சுந்தரத்தைக் கண்டுபிடிக்கப்போகிருய்?" என்று அச்சுதம்பிள்ளை கூறினுர்.

வக்:—அவன் புத்திரியின் மூலமாய் - அச்சுந்தரம் நான் எவ்வளவு கொலையாளியோ அவ்வளவு கொலையாளி தான் - அந்தக் கைக்குட்டைச் சாட்சியம் தனக்கு ஆபத்தை யுண்டாக்குமென்று அவன் பயந்து கொண்டு ஒளிந்திருக்கிருன்.

அச்சு:—உண்மையில் அது ஆபத்தான சாக்ஷியமே.

வக்:—ஆம். ஆனுல் சுந்தரத்தின்மே லல்ல. அந்தக்குட்டை குற்றத்தை யின்னெருவர்மேல் சுமத்தவே ஏற்பாடு செய்யப்பட்டது. கொலை செய்தவன் யாராயினும் சரி. அவன் சுந்தரத்தின்மேல் அக்கொலையைச் சுமத்த அவன் கைக்குட்டையைக் களவாடினுன். அதே வீட்டில் எல்லம்மாள் போன்ற ஆள் அந்த வீட்டிலிருப்

பதால் அது சுலபமாயிருந்தது. கொலைக்குமுன் இலக்ஷ்மணன் வீட்டிலில்லை. இதனால் எல்லம்மாள் அக்குட்டையைக் கொண்டுபோய் வாசிகசாலையில் அவனிடமளிக்க அவகாசமிருந்ததென்று தெரிகிறது.

அச்சு:—“அது அப்படியே இருக்கலாம். ஆனாலும் சற்று நிதானமாய் ஆலோசியும். பைத்தியக்காரத்தனமான அத்தீர்மானத்தில் சட்டென்று குதித்துவிட வேண்டாம். பகிரங்கமாக ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுமுன் அதை நெருங்கி யாராய்ச்சி செய்யும்.

வக்:—“நாம் செய்யவேண்டிய வேலையிருக்கிறது. முதலாவது அந்தச் சுந்தரம் என்பவனைக் கண்டுபிடிக்க வேண்டும். அவன்மேல் நாம் சந்தேகங்கொள்ளவில்லையென்று அவனுக்குப் புலப்படும்படிச் செய்தால் அவன் அனேக விஷயங்களைக் கூறிவிடுவான். ஆரம்பத்தில் நாம் அவனைச் சரியாய்க் கேட்காமல் போய்விட்டோம்” என்றார்.

இதற்கிடையில் அம்புஜம் தன் அறையில் போய்ச் சேர்ந்தாள். அவள் குணம் துயரமானதாக விருந்தது கோபமாக மாறிவிட்டது. தான் கிருஷ்ணராவை யிதைக் கண்டு பிடிக்கும்படி யமர்த்தியதற்காகத் தன் மேலேயே கோபமடைந்தாள். இலக்ஷ்மணன் அதைத்தடுத்தது அவளுக்கு நினை விருந்தது. அவன் எல்லம்மாளிடம் அன்புடையவனுக விருப்பது அவளுக்குக் கோபத்தை யுண்டாக்கியது. அதோடு அவன் முன்னமே யவளோடு அறிமுகமாக விருப்பதை மறைத்தது அவளுக்கு அதிக கோபத்தை யுண்டாக்கியது. எல்லம்மாள் இலக்ஷ்மணனுக்கு அறிமுகமாக விருப்பதாகத் தெரிந்ததாலேயே அவள் மேல் கோபம். அச்சுதம்பிள்ளை கிருஷ்ணராவை

யுடனே நீக்கிவிடாததற்காகவும் அவன் கண்டு பிடித்த தாகக் கூறும் ருசுக்களை நிராகரித்துவிடாததற்காகவும் அவர் மேற் கோபம் - எல்லாம் சேர்ந்து, கடைசியில் எல்லம்மா ளின்மேல் பாய்வதென்று அவளைத் தூண்டின - அவளிடம் பேசி யவளுக்கும் இலக்ஷ்மணனுக்கு மிருக்கும் சம்பந்தத் தின் உண்மையளவை யறியவேண்டுமென்று தீர்மானித் துக் கொண்டாள்.

இந்த எண்ணத்தோடு அவள் எல்லம்மாளின் அறைக் குச் சென்றபோது அங்கு அவளும் இலக்ஷ்மணனும் சம் பாஷித்துக்கொண்டிருக்கக் கண்டாள். எல்லம்மாள் இவ ளைக்கண்டதே, "வாவா உள்ளே - எங்களோடு வந்து சம் பாஷி" என்றாள்.

இலக்ஷ்மணன் சட்டென்று தன் கடியாரத்தையெடுத் துப் பார்த்து "அப்படிப்பேச நமக்கு அவகாசமில்லை - நான் ஒரு காரியமாக எல்லம்மாளை வெளியி லழைத்துக்கொண்டு போகவேண்டும். வண்டியைக் கொண்டுவரும்படி கட்டளை யிடலாமா?" என்றான்.

எல்ல:—"சந்தேகமின்றி என்னிடம் வரும் விருந்தாளிக ளெல்லாம் தங்கள் பிரியப்படி கட்டளையிடும் சுதந்திர முடையவர்களாக விருக்கவேண்டு மென்பதே யென் விருப்பம்" என்று அம்புஜத்தையும் நோக்கிப் புன் னகையோடு கூறினாள்.

வீட்டில் காரியஸ்தி, அதாவது வேலைக்காரிகளில் ஒருத்தி தன் முன் அத்தகைய அதிகாரத்தைச் செலுத்தும் போது அம்புஜத்தின் மனம் எவ்வாறு இருக்குமென்பதை யிதை வாசிப்போரே யுணரலாகும். ஆகையால் அவள் பார்வை யொருவித விகாரமடைந்தது.

அதைக்கண்ட எல்லம்மாள், "அம்புஜம் - அவ்வாறு பார்க்கவேண்டாம். உனக்குப் பிரியமிருக்கு மட்டும் இதை

யுன் வீடாகக் கருதிக் கொள்ளவேண்டு மென்பதே யென் விருப்பம்; உனக்கு வேண்டு மட்டும் நீ இங்கிருக் கலாம்" என்றாள்.

இலக்ஷ்:—"வண்டி வந்துவிட்டது. எல்லம்மா வா போவோம்" என்று கூறினான்.

உடனே இருவரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். இதனால் இவர்களுக்குள் மிக்க நெருங்கிய நட்பிருக்கிற தென்று அம்புஜத்திற்குத் தோன்றியது. அந்தோ பெண் புத்தி கடைசியில் பேதமையே. இலக்ஷ்மணன்மேல் கோபமும் வெறுப்புமடைய இப்போது பூரணமான காரணம் இருப்பினும், அந்தரங்கத்தில் அவனிடம் அவளுக்கிருந்த காதல் அவற்றை யெல்லாம் மறக்கச் செய்தது. அதனால் அவனுக்கு எப்படி உதவி செய்யலாம் என்பதிலேயே அவள் மனம் சென்றது. அவர்கள் எங்கு செல்கிறார்களென்று கூட சிந்திக்காமல் அங்கிருந்து திரும்பினாள்.

இரண்டொரு நிமிடங்களில் பத்திரிகைக்குச் சமாசாரமனுப்பும் வாலிபனாகிய பினாகபாணி வந்து அம்புஜத்தைக் கண்டான். அச்சமயம் துப்பறிபவர்கள்மேல் வெறுப்பு காட்டும் எல்லம்மாள் வெளியில் போயிருப்பது நல்லதாயிற் றென்று அம்புஜம் எண்ணிக்கொண்டாள்.

பினாகபாணி அவளைக்கண்டதும் ஆரம்பத்திலேயே எடுத்ததும், "சுந்தரம் இருக்குமிடம் எனக்குத் தெரியும்" என்றான்.

அம்பு:—"உனக்குத் தெரியுமா? எங்கே?" என்று மிக்க ஆவலோடு கேட்டாள்.

பினாக:—தன் புத்திரியின் வீட்டிலிருக்கிறான். அங்கேயே தான் அவன் இருந்திருக்கிறான். மரகதம் என்ற அப் பெண் நல்ல அபிநயக்காரி. நான் கடையில் உள்ள உண்மையை யறிந்துகொண்டேன். அவள் என்னை

யேமாற்றமுடியவில்லை. அவன் அவள் வீட்டிலேயே இருக்கின்றான் - அல்லது அவன் எங்கிருக்கிறானென்பது அவளுக்குத் தெரியும் என்ற வரையில் எனக்கு நிச்சயம். நான் போலீஸாருக்குச் சங்கதியை யறிவித்திருக்கிறேன். அவர்கள் எப்படியும் அவனைக் கண்டு பிடித்து விடுவார்கள். சீக்கிரத்திலேயே யென்று நம்பகமிருக்கிறது.

அம்பு:—"இனி யார்மேல் சந்தேகமுண்டாகும்?" என்று பினாகபாணியைக் கேட்டாள்.

பினாக:—எனக்குத் தெரியாது. கிருஷ்டப்பன் இலக்ஷ்மணன்மேல் கண் வைத்துக்கொண் டிருக்கிறான். ஆனால் அதற்குச் சரியான ருசு அவனிடமில்லை. என் வரையில் இலக்ஷ்மணன் செய்தானென்று நான் எள்ளளவும் நினைக்கவேயில்லை.

அம்பு:—இப்படிக் கூறியதற்காகக் கடவுள் உனக்கு ஆசீர்வாதம் செய்வார்.

பினாக:—எப்படியாயினும் அவர்கள் எதையோ கண்டு பிடித்து மர்மமாக வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அதை யென்னிடம் கூறமாட்டார்கள். நான் இப்போது தலைமைக் காரியாலயத்திலிருந்து வருகிறேன். அவர்கள் ஏதோ புதிதாகக் கண்டுபிடித்த உளவுகளைப் பற்றி மனத்துடிப்புடையவர்களாக விருக்கிறார்கள்.

அம்பு:—அது அந்த உளவுகள் இலக்ஷ்மணனைப்பற்றி யென்று கருத உனக்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா?

பினாகபாணி அவளை யுற்று நோக்கி, "அதற்கு விடையளிப்பது வெறுப்பாயிருக்கிறது. ஏனெனில் அது உனக்கு மனவருத்தத்தை யுண்டாக்கும்.

அம்பு:—அப்படியாயின் நீ யுண்மையைக் கூறுவதாயின்

நான் கேட்ட கேள்விக்கு ஆம் என்று கூறவேண்டும் போலும்.

பிணக:—அப்படித்தான் என்று அஞ்சுகிறேன். சத்தியம் - அவன் சத்தியவான் என்று கருத இடமிருக்கிறதா?

அம்பு:—அப்படியல்ல - அப்படியல்ல. எனக்குக் கொஞ்சம் சங்கதி கூறு. ஒரு சமயம் - பேச்சு முறைமைக்கு - அவரே செய்ததாகக் கருதுவோம். அவர் மேற்கு நாட்டில் போய் சில வருடங்களாக விருந்திருக்கிறார் என்பது உனக்குத் தெரிந்த விஷயம். அந்த நாட்டில் கொலையைப்பற்றி நாம் இங்கு கருதுவதுபோல் அங்குள்ளவர்கள் பிரமாதமாகக் கருதுவதில்லை - அப்படி நினைக்கிறார்களா?

பிணக:—என்ன உன் மனதிலிருப்பது - கள்ளர்களைத் துறத்திக்கொண்டு போகும் போலீஸார் கொன்றுவிடுவது போல் அல்லது இருவர் சண்டை செய்தால் கொலை நடப்பதுபோல் என்று கருதுகிறாய்?

அம்பு:—அல்ல. அல்ல. அது எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. மனிதரைக் கொல்வதை யவர்கள் கொலையென்று கூறுவதில்லையாக்கும் என்று நான் நினைத்தேன்.

பிணக:—இல்லை. அவர்கள் கொலையென்றே கருதுகிறார்கள். படுகொலை - மேல் நாட்டார் வஞ்சம் தீர்த்துக்கொள்ள அல்லது அக்கிரமமாக்க் கோபமூட்டப் பட்டால் கொலை செய்வார்கள்.

அம்பு:—நீ இதைக் கூறியதற்காக நான் உண்மையில் சந்தோஷமடைகிறேன். ஓ பிணகபாணி! இலக்ஷ்மணன் கொலைக்குற்றம் சாட்டப்பட்டால் நான் பேசாமல் குந்திக்கொண்டிருக்கப் போகிறதில்லை யென்பது உனக்குத் தெரியுமா? அவர் அதைச் செய்தாரோ இல்லை

யோ அது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இடம் கொடுக்கப்பட வேண்டும். நான் அவர் குணங்களை நன்கறிவேன். அவர் ஒருவித முரட்டுத்தனமும் அலட்சியமுமான குணமுடையவர். உண்மையில் தான் நிரபராதியாக விருந்தாலும், அதை நிரூபிக்கச் சிரமை யெடுத்துக் கொள்ளமாட்டார். அவர் ஒருவித அபூர்வமான குணமுடையவர்; எனக்கு நன்றாய்த் தெரியும். தான் சிறை செய்யப்பட்டால்கூட அசட்டைத் தனத்தாலேயே அந்த ஆள் பேசாமலிருந்துவிடும் சுபாவமுடையவர்.

பினாக:—அப்படியாயின் அளவு கடந்து மிக்க தூரம் செல்லும் அசட்டுத்தனமே. ஆனால் அவன் குற்றவாளியாயிருந்தால் அப்போதெப்படி நடந்து கொள்வான்?

அம்புஜம் சற்று தடுமாற்றமுற்று, "அப்போதும் இப்படியேதான் நடந்து கொள்வார்" என்றாள்.

பினாகபாணி, "அப்படியாயின் - அவன் சுபாவம் இன்னதென்று கண்டுகொள்ளக்கூடாத சுபாவம்" என்றான்.

அம்பு:—ஆம். ஆயினும் நான் அதை யறிந்துகொள்ளப் போகிறேன். நீ எனக்கு உதவி செய்யவேண்டும்.

பினாக:—"ஆகா கடைசிவரையில் உனது அபிப்பிராயத்தையே நிரூபிக்கவும் உலக்கு அதை மெய்ப்பிக்கவும் முயல்கிறேன்" என்றான்.

---

## 14-வது அத்தியாயம்.

துரைத்தன வக்கில் உத்தேசித்தபடி சுந்தரம் தன் புத்திரியின் வீட்டிலேயே ஒளிந்துகொண் டிருந்தான். அவன் புத்திரியாகிய மாகதம் மிக்க புத்திசாலித் தனமுடையவள். அவள் தன் தந்தையைப் போலிஸா

ரிடம் சிக்கவொட்டாது காப்பாற்ற வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்ட வரையில் மிக்க சாமார்த்தியமாகவே அவ்வேலையைச் செய்தாள்.

ஆயினும் தான் கொலை செய்யாதிருந்தால் பயப்பட வேண்டிய காரணமேயில்லையென்று உறுதியாகக் கூறப்பட்ட பின் அவன் வெளிவர உடன்பட்டான். அக்குட்டை தன் குட்டையாக விருப்பதாலேயே தன்னை யுடனே சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் அடைத்து விடுவார்களென்று பயந்து கொண்டான். அப்படி நடக்காதென்றும், தீர விசாரணை செய்து பூரணமாக ருசுவேற்பட்டாலன்றி தன்னை ஒன்றும் செய்யமாட்டார்களென்றும் உண்மையா யறிந்த பின் அவன் தன் புத்திரியின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டி லிருந்து வெளிப்பட்டான்.

துப்பறியும் கிருஷ்டப்பன் மரகதத்தை "நீ ஏன் உன் தந்தையை ஒளித்து வைத்தாய்?" என்று கேட்டான்.

மரகதம்:—ஆம். நானே என் தந்தையை மறைத்து வைத்திருந்தேன். அவர் ஒரு குற்றமும் செய்யாதவரையில் போலீஸார் அவரைப் பிடித்துக்கொண்டு தொந்திரை செய்யும்படி விட்டுவிடமாட்டேன். என் வீட்டில் என் கணவர் அசௌக்கியமாக விருக்கிறார். இங்கே போலீஸாரும் துப்பறிவோரும் அடிக்கடி வந்து குழப்பம் செய்ய உதவாது.

கிருஷ்டப்பன்:—நீ செய்தது சட்டத்திற்கு விரோதமல்லவா?

மர:—சட்டைத்தைப்பற்றி என்னிடம் பேசவேண்டாம். எனக்குச் சட்டத்தைப்பற்றி பயமில்லை. என் தந்தை அன்று பிறந்த குழந்தைபோல் நிரபராதி. ஆனால் அவருக்கு எச்சரிக்கையாய்ப் பேசத் தெரியாது. போலீஸார் அவர் மனங்கலங்கச் செய்துவிட்டால்

அவர் பீதியடைந்து எப்படியேனும் குழறிவிடுவார். இந்த வார்த்தை மொழிந்தால் இன்னது நேருமென்று அவர் அறிய மாட்டார். ஆகையால் இவ்விஷயம் போகப்போக எப்படி முடிகிறதென்று தெரியுமட்டும் அவரை மறைத்து வைப்பதே நலம் என்று தீர்மானித்தேன்.

கிருஷ்:—நீ புத்திசாலியான மாதானபடியால் உனக்குத் தெரிந்தே யிருக்கவேண்டும். அதாவது———

மா:—எனக்குத் தெரிந்தவரையில் தெரிந்தே யிருக்கிறது. நான் புத்திசாலியான பெண்ணுகு முன்பே புத்திரியாகவும் மனைவியாகவுமா யிருக்கிறேன். அம்மாதிரிப் பேச்சொன்றும் என்னிடம் பேசவேண்டாம். உனக்கு என் தந்தை வேண்டும். அதோ அவர் இருக்கிறார். அவரைக் கேட்கவேண்டியதைக் கேள் - அவருக்குக் குழப்பமுண்டாகும்படி உன் சட்டப்பேச்சுகளை எல்லாம் பேசாதே. தெளிவாய் ஒழுங்காய் விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவற்றைத் தெரிந்துகொள். அப்படிக்கின்றி அவருக்குப் பீதியாவது குழப்பமாவது உண்டாக்கினுல் ஒன்றுமே யறிய முடியாது.

கிருஷ்டப்பன் அவள் கூறிய நியாயத்தை யறிந்துகொண்டு, கோரய்ச் சுந்தரத்தினிடம் சாமார்த்தியமாய்ப் பேசிச் சங்கதிகளை யறிந்து கொண்டான்.

சுந்தரம் ஜீவாதாரநிதியில் ஒரு பாகத்தை வாங்க மிக்க ஆவலுடையவனுக விருந்தான். அந்நிதியின் காரியஸ்தன் அவனை யவ்விஷமாக நெருக்கிக்கொண்டிருந்தான். அதனுல் அவன் அதற்குவேண்டிய தொகையை யெங்கேனும் வட்டிக்குக் கடன்வாங்க ஆலோசித்தான். ஆனுல் அவன் புத்

திரி அதற்கு வட்டி கொடுப்பதாயில் நாம் பாகம் வாங்குவதில் இலாபம் ஒன்றும் இராதென்று தடுத்தாள்.

கிருஷ்ணப்பன் இச்சங்கதிகளைப்பற்றி நாம் கவனிப்பதில் பயனில்லை யென்று கருதிக் கைக்குட்டையைப்பற்றிச் சுந்தரத்தை நெருக்கமாய் விசாரித்தான்.

சுந்தரம்:—இது எனக்கு விளங்கவில்லை - என் கைக்குட்டையெப்படிக் கொலை நடந்த இடத்திற்குச் சென்றதென்று எனக்கு விளங்கவில்லை. நான் அதை உபயோகிக்கவில்லை யென்று மட்டும் கூறுவேன்.

கிருஷ்:—அது உன் அறையிலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட் டிருக்கலாமா ?

சுந்:—இருக்கலாம்-யாரேனும் எடுத்துக்கொண்டு போயிருக்கலாம்; அல்லது வண்ணான் அதைச் சுத்தம் செய்துகொண்டுவர எடுத்துச் சென்றபோது யாரேனும் எடுத்துக்கொண்டு போயிருக்கலாம்; அல்லது அவன் அதை யுலர்த்தும்போது அது காற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்டு யாரிடமேனும் சிக்கி யிருக்கலாம்.

கிருஷ்ணப்பனுக்கும் மற்றவர்களுக்கும் இவை இதுகாறும் புத்திக்குப் புலப்படவில்லை. இப்போதுதான் கிருஷ்ணப்பன் மனதில் இவை யுறுத்தின. அதன்மேல் அவன் சுந்தரத்தை நோக்கி, "நீ கூறுவது சரியே; உன் மனதில் கலவரத்தை யுண்டாக்கிக் கொள்ளாதே: கொலை நடந்த பிற்பகல் நீ எங்கெங்கு சென்றிருந்தாய் என்பதைச் சாவதானமாய்க் கூறு" என்றான்.

சுந்:—"எனக்கு உண்மையில் யாவும் பெருங்குழப்பமாய்க் காண்கின்றன. நான் முதலில் வீட்டிலிருந்து புறப்பட்டதே அந்த நிதியின் காரியஸ்தனிடம் சென்றேன்; அவன் பணத்தைச் சீக்கிரம் கட்டிவிட்டால் நலமென்று

தொந்தரை செய்தான். அங்கிருந்து நான் என் மகளிடம் சென்றேன். அங்கு வந்து பார்க்கும்போது இவள் கணவன் மிக்க அதிருப்தியான நிலைமையிலிருந்தான். இவை யாவும் சேர்ந்து என் மனதிற்குப் பெருங்குழப்பத்தை யுண்டாக்கின. பிறகு நான் வீட்டிற்குச் சென்றபோது முதலாவதாக அறிந்த சங்கதி எஜமான் இன்னும் வீட்டிற்கு வரவில்லை யென்பதே. அதற்குமுன் அவர் ஒருபோதும் இப்படி வராமலிருந்த தில்லை. எல்லம்மாள் தனியே போஜனமருந்தினுள். அம்புஜம்மாள் ஒன்றும் சாப்பிடவேயில்லை. பிறகு யாவரும் குசுகுசு வென்று பேசிக்கொண்டும், மர்மமாகப் பேசிக்கொண்டுமிருந்தார்கள். கடைசியில் எஜமான் இறந்துபோனுர் என்று கூறினுர்கள். அதைக் கேட்டது முதல் என் மனம் பெருங்குழப்பமாய் விட்டது. என் மனதின்மேல் ஒரு மூடுபனி மூடிக்கொண்டது. அந்த மாண விசாரணையும் மற்ற சங்கதிகளும் யாவும் எனக்குப் பெருங் கனவுபோல் தோன்றுகின்றன" என்றுன்.

கிருஷ்:—சரி. கொலை நடந்தபிறகு அன்றிரவு நீ யேன் வீட்டைவிட்டோடி வந்து விட்டாய்?

சுங்:—ஆ! அன்றிரவா? கூறுகிறேன். எனக்கு அம்மாளிகையிலுள்ள தொழில் முறைமையால் எந்த வேளையிலும் அவ்வீட்டிற்குள் எங்கு வேண்டுமாயினும் செல்ல அதிகாரமுண்டு. ஆகையால் நான் ஒரு அறையின் ஓரமாகப் போய்க்கொண் டிருக்கையில் துப்பறியும் கிருஷ்ணுராவ், நான் - என் எஜமான்மேல் அளவு கடந்த அன்புவைத்திருந்த நான் - அவரைக்கொன்றதாகவும், என் கைக்குட்டையே யதற்குப்போதுமான ருசுவென்றும் கூறுவதை என் காதாற் கேட்டேன்.

அக்குட்டையை நான் பார்த்தேன். அய்யோ! கடவுளே! கடவுளே!! நான் அவரைக் கொல்லவில்லை" என்று ஆத்திரம் வந்தவன்போல் கூவினன்.

மர:—"அந்தோ! அவருக்குக் கலக்க முண்டாக்கி விட்டாய்" என்றாள்.

கிருஷ்:—ஆச்சு ஒரு நிமிடம் பொறு. சுந்தரம்! நிதானமாய் உன் சங்கதியை முடித்துவிடு. கிருஷ்ணராவ் உன்மேல் குற்றம் சாட்டியதைக் கேட்டபின் நீ என்ன செய்தாய்?

சுந்:—"என் மகளிடமிருந்து சங்கதி வந்ததென்று கூறி விட்டு நேராய் இங்குவந்தேன். இவள் 'போலீஸார் எப்படியும் உன்னைத் தேடி வருவார்கள்; நீ பேசாமல் என் சிநேகி வீட்டில் மறைந்திரு' என்றாள். அப்படியே சென்றேன்" என்றான்.

கிருஷ்ணப்பன் மாகதத்தை நோக்கி "உன் தந்தைக்கு ஒரு பயமுமில்லை. இவரை இங்கே உன்னிடமே வைத்துக் கொண்டிரு. இவர்மேல் ஒரு சந்தேகமும் வாராது. அதற்கு நான் பொறுப்பு. நான் முன்னமே இவர், கொலை நடந்த காலத்தில் ஜீவாதார நிதியின் காரியஸ்தனிடமும், வைத்தியரிடமும் சென்றுகொண் டிருந்தாரென்று கண்டு பிடித்திருக்கிறேன். இப்போது இவர் கூறியது அதைப் பூரணப் படுத்திவிட்டது. இவரை யிங்கேயே வைத்துக்கொண்டிரு. இரண்டொரு நாட்களில் நான் வருகிறேன். ஆனால் உன் தந்தை யெங்கேனும் ஓடிவிட முயன்றாலோ, பிறகு கஷ்டத்தில் சிக்கிக்கொள்வார்" என்றான்.

மாகதம் அவன் கூறியபடியே செய்வதாக ஒப்புக் கொண்டாள். அதன்மேல் கிருஷ்ணப்பன் அங்கிருந்து நேராய்த் துரைத்தன வக்கீலிடம் சென்று நடந்த சங்கதிகளைக் கூறினன். அவர் "இலக்ஷ்மணன் பேல் பூரணமாக

இக்குற்றத்தைச் சாட்டவேண்டின் இன்னெரு ருசுவுக்கு நீ மிக்க தூரம் செல்லவேண்டியதில்லை. அவன் அக்கைக்குட்டையை எல்லம்மாள் மூலமாகவோ வேறு எவ்விதமாகவோ கைப்பற்றி யிருக்கிருன். போய் அதைக் கண்டுபிடி" என்றார்.

அம்புஜம் கொஞ்சங் கொஞ்சமாய் எப்படியோ கிருஷ்ணப்பன் கண்டுபிடித்த உளவுகளைப்பற்றித் தெரிந்துகொண்டாள். அவள் ஒரு நாள் மாலை கிருஷ்ணாவிடம் சென்று,

"நான் என் சிற்றப்பாவின் பெட்டிகளிலுள்ள கடிதங்களை யெல்லாம் ஆராய்ச்சி செய்தேன். கடைசியில் இதோ இது அகப்பட்டது. இது அவர் பெட்டிகளில் ஒன்றிலிருந்த ஒரு கூண்டில் இருந்தகப்பட்டது" என்று கூறிக் கொண்டே ஒரு கடிதத்தை யவனிடமளித்தாள். அக்கடிதம் கிழிந்திருந்தது. அதில் கையால் அச்சடிக்கப்பட்ட சில வார்த்தைகளிருந்தன. அக்கடிதம் அழுக்குப்பட்டுமிருந்தது. ஆனல் நன்ருகத் தெரிந்தது. அதில்,

"நான் அன்னியர் யாராலேனும் கொல்லப்பட்டால், என்னைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க முயலவேண்டாம். நான் இத்தகைய சங்கதி நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனல் அப்படி நேரிட்டால் அவன் அம்மையப்பனுகவே யிருக்கவேண்டும். அவனைத் தேடவேண்டாம். அவன் அகப்படமாட்டான். ஆனல் அவன் நோக்கம் நல்லதே—" என்றவை எழுதப்பட்டு, அதன்மேல் எழுதுகோல் தட்டென்று நின்றிருந்தது; அதை யெழுதிய ஆள் இடையில் தடுக்கப்பட்டானே அல்லது வேறு என்ன காரணமோ தெரியாது.

கிருஷ்:—"இந்த அம்மையப்பன் யார்?" என்று கேட்டான்.

அம்பு:—எனக்கு அதைப்பற்றி யொன்றும் தெரியவில்லை. சிற்றப்பா எப்போதும் அம்மனிதனைப்பற்றி யென்

னிடம் பேசவில்லை. ஆனால் இக்கடிதத்திலுள்ள சங்கதியைப்பற்றிச் சந்தேகமொன்றுமில்லை. இது சிற்றப்பாவின் காரியாலயத்திலுள்ள அச்சு எந்திரத்தில் அச்சடிக்கப்பட்டதே. இந்த, எழுத்துக்களின் மாதிரி எனக்கு நன்றாகத் தெரியும்.

கிருஷ்ணராவ் "நீ இக்கடிதத்தை யெங்கிருந்து கண்டு பிடித்தாய்? அந்த விடத்தைக் காட்டக்கூடுமா?" என்றான்.

அதன்மேல் இருவரும் அம்புஜத்தின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு சென்றதும் அம்புஜம் எந்த மேஜையிலிருந்து அக்கடிதத்தைக் கண்டெடுத்தாளோ அந்த மேஜையை யவனுக்குக் காட்டினாள். கிருஷ்ணராவ் அந்த மேஜையை நன்றாகக் கவனித்தான்.

அதற்குள் அம்புஜம்:—"இந்த மேஜை முதலியவற்றை யெல்லாம் என்போல் ஒருவரும் சரியாகச் சோதித்துப் பார்க்கவில்லை; ஒருவரும் அதைக் கவனிக்கவில்லை. இக்கடிதம் இலக்ஷ்மணம் பிள்ளையைக் காப்பாற்றி விடுமா?" என்றாள்.

கிருஷ்:—பெரும்பாலும் செய்யலாகும். நாம் இதில் குறிக்கப்பட்ட மனிதனைக் கண்டு பிடிக்கவேண்டும்.

அம்பு:—ஆனால் என் சிற்றப்பா அப்படிச் செய்யவேண்டாமென்று திட்டமாகக் கூறுகிறார்.

கிருஷ்:—"அத்தகைய கட்டளைகள் கவனிக்கப்படலாகாது. இத்தகைய விஷயத்தில் அந்த ஆளைக் கண்டுபிடித்தே தீரவேண்டும்" என்றான்.

ஆனால் என்ன முயற்சி செய்தும் அம்மையப்பன் என்ற ஆளைப்பற்றி எவ்வித தகவலு மகப்படவில்லை. ஆயினும் இத்தகைய கடிதம் ஒன்றிருப்பதால் அது இலக்ஷ்மணன் மேலிருந்த சந்தேகத்தை நெடுந்தூரம் குறைத்து

விட்டது. அம்மையப்பன் என்ற மனிதனைக் கண்டு பிடிக்கும்படி சரியான ஆட்களுக்குக் கட்டளை யிடப்பட்டது.

இச்சம்பவங்கள் நடந்த ஐந்தாறு நாட்கள் கழித்து, லாயர் அச்சுதம் பிள்ளை தமது காரியாலயத்தி லிருக்கையில் வேலைக்காரன் வந்து, "யாரோ ஒரு வாலிபன் தங்களைக் காண வந்திருக்கிறான்" என்று கூறி ஒரு சீட்டை யவரிட மளித்தான். அதில் திருவேங்கடம் என்று எழுதியிருந்தது.

அச்சுதம் பிள்ளை நகைத்துக் கொண்டே "ஆ! உடான் திருவேங்கடம். அவனை யுடனே யுள்ளே வரச்சொல்" என்றான்.

திருவேங்கடம் உள்ளே வந்ததும், ஒருவித மரியாதையும் செய்யாமல், "அய்யா! நான் தங்களிடம் பேசவேண்டும்" என்றான்.

அச்சு:—"சரிதான். என்ன கூறவேண்டுமோ கூறு" என்றான்.

திருவேங்கடம்:—ஆனால், நான் கூறுகிற சங்கதிகளை யெல்லாம் நீ சாந்தமாகக் கேட்கவேண்டும். என்னைக் கேலி செய்யலாகாது. அவ்வாறே செய்கிறாயா?

அச்சு:—ஆகா, அப்படியே செய்கிறேன். அவ்வாறு வாக்களிக்கிறேன் ஆனால் நான் அதிக வேலையுடையவன்; இன்று காலை அதிக காலம் செலவழிக்க எனக்கு அவகாசமிராது.

திரு:—எனக்குத் தெரியும். நான் ஐந்து வருடங்களாக இரத்தினசாமிப் பிள்ளை யிடம் வியர்த்தமாக வேலை செய்யவில்லை. எனக்கு இத்தகைய விவகாரங்கள் நன்றாகத் தெரியும்.

அச்சு:—அப்படியாயின் உனக்கு அனேக விஷயங்கள் தெரியும்?

திரு:—உன்னைப்போன்ற மனிதர்களுக்கு எவ்வளவோ அதிக

மான வேலை யிருக்குமென்பதும், முன் ஏற்பாடில்லாமல் நீங்கள் ஒருவருக்கும் பார்க்க இடங்கொடுக்கமாட்டீர்களென்பதும், முதலாகிய இத்தகைய விவகாரங்களெல்லாம் எனக்குத் தெரியும். என் எஜமானுடைய மாதிரிகளை யெல்லாம் நான் சவனித்து வந்திருக்கிறேன். ஆதலால் நான் முட்டாளல்ல.

தான் இம்மாதிரி கூறுவதற்கு அச்சுதம் பிள்ளை ஏதேனும் கேலியாகப் பேசுவான் என்று திருவேங்கடம் எதிர் பார்த்தான். ஆனால் அவர் உண்மையைக் கேள்விப்பட்டவர்போல் பேசாமல் தலையசைத்தார். அதைக் கண்டதே அவன் மிக்க வியப்படைந்து,

"பார்த்தீர்களா! நான் ஒரு பிரசித்திபெற்ற மனிதனாக வேண்டுமென்று எண்ணியிருக்கிறேன்" என்றான்.

அச்சுதம் பிள்ளை "ஒரு வக்கீலாகவா?" என்றார்.

திரு:—இல்லை அய்யா! நான் ஒரு துப்பறிபவனாகக் கருதுகிறேன். எனக்கு அந்த வேலையில் உற்சாக மிருக்கிறது. அதில் ஜெயமடையும் வண்ணம் பாடுபடக் கருதியிருக்கிறேன். இப்போது அதற்காகத்தான் தங்களைக் காண வந்தேன். இந்த இரத்தினசாமிப் பிள்ளையின் கொலையைப் பற்றித் தங்களுக்குத் தெரியுமல்லவா?

அச்சு:—ஆம்; தெரியும்.

திரு:—அந்த இலக்ஷ்மணன் என்பவன் அக்கொலையைச் செய்யவில்லை யென்பது உனக்குத் தெரியுமல்லவா?

அச்சு:—ஆ! இது முக்கியமான விஷயம். அவன் கொலை செய்யவில்லை யென்பது உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?

திரு:—இப்போது நீ என்னைக் கேலி செய்கிறாய்; நான் உன் மேல் குற்றம் கூறலாகாது; நான் சிறுவனே; இந்த

விஷயங்களை யறியாதவன்; ஆனால், அச்சுதம் பிள்ளை! நான் சில உளவுகளைக் கண்டு பிடித்திருக்கிறேன். நான் அவற்றை எஜமானுடைய தேகம் இருந்தகப்பட்ட அதே யிடத்திற்குச் சமீபத்திலிருந்து கண்டு பிடித்தேன்.

அச்சு:—நீ கண்டு பிடித்த உளவுகளென்ன கூறு பார்ப்போம்.

திரு:—நல்லது; நான் பத்திரிகைக்குச் சமாசாரம் அனுப்பும் அந்தப் பிஞகபாணியிடம் அவற்றைக் கூறியபோது அவன் சட்டை செய்யவில்லை. நீயும் அப்படிச் செய்வதில்லை யென்று வாக்களி.

அச்சு:—"ஆகா. அப்படியே வாக்களிக்கிறேன். இனி உன் சங்கதியை நிதானமாகக் கூறு" என்றார்.

திரு:—நல்லது; கூறுகிறேன். ஒரு பொத்தானும் ஒரு மொத்தை மண்ணும் அகப்பட்டன.

இதைக்கேட்டதும் அச்சுதம்பிள்ளை வாக்குத்தத்தத்தை மீறி நகைத்துவிட்டே யிருப்பார். ஆயினும் கஷ்டத்தோடு சமாளித்துக்கொண்டு, "எத்தகைய பொத்தான்?" என்றார்.

திரு:—"அழகுக்கு வைக்கப்படும் ஒரு பொத்தான்" என்று கூறியதும், "ஓ! நாமேன் தட்டென்று பொய் கூறிவிட்டோம். இது நமது பிறவிக்குணமோ? அல்லது இதில் ஏதோ நன்மை யிருக்கவேண்டும்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

என்ன காரணத்தாலோ திருத்தி உண்மையான பாதரக்ஷைப் பொத்தான் என்று கூறாமலே யிருந்து விட்டான்.

அச்சு:—மண் மொத்தையில் என்ன இருந்தது?

186511
சென்னை-600 008

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி * * * * மாதவன்

அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இது வரையில் வெளிவராதது; சாமர்த்திய-சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது, இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 1—12—0. தனித்தனி வாங்குபவருக்கு ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 1.

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவையுமான சம்பங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட் டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் விருக்கின்றன வென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 2—4—0

அர்ஜுனஸிங், சுந்தர் „ 0 2 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலை பெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொருவருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0
வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras